
2013

# பகிர்


10 ஆவது ஆண்டு சிறப்பு மலர்



நெடுந்தீவு பாடசாலைகளின்

## பழைய மாணவர் மன்றம் - கனடா

**Old Students Association of Delft Schools - Canada**



REAL ESTATE
& MORTGAGE SERVICE
SOLD
Your Dreams,
My Mission....
THINKING OF
BUYING OR SELLING
A HOME?
MORTGAGE ALLIANCE
Lic. #: M10000341
BUS: 416-499-5454
FAX: 416-499-8366
200 - 2005 Sheppard Ave E,
Toronto, ON M2J 5B4
Century 21
Leading Edge Realty Inc.
Brokerage
BUS: 416-298-6000
FAX: 416-298-6910
301 - 1825 Markham Rd.,
Toronto, ON M1B 4Z9
SRI NADARAJASUNDRAM
647-831-3279
srinada21@gmail.com
www.srishome.com

# சமர்ப்பணம்



ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிப்பாளர், கூட்டுறவாளர், விசேட ஆணையாளர்,
அகில இலங்கைச் சமாதான நீதவான் என்று பல்துறை ஆளுமையாளன்,
நெடுந்தீவு மாணவர்களின் பிதாமகன்

## அமரர்

## இராமநாதன் சின்னத்தம்பி அவர்கள்

# சமர்ப்பணம்



அமரர் அருட்சகோதரி

## இக்னேசியா சூசைப்பிள்ளை அவர்கள்

**அதிபர், றோ. க. மகளிர் கல்லூரி, நெடுந்தீவு.**

**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா**

**நடப்பாண்டு நிர்வாக அமைப்பு 2013 -2014**

ஆலோசகர்: - திரு. சி. கார்த்திகேசு, இளைப்பாறிய அதிபர்

நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்:

தலைவர் : - சுப்பிரமணியம் நடராசா 905 457 7678 , 416 802 6291

செயலாளர் : - கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை 647 774 6154

பொருளாளர் : - சின்னத்தம்பி சண்முகநாதன் 905 286 0533

துணைத் தலைவர் : - இராமநாதர் கந்தையா 416 428 4760

துணைச்செயலாளர் : - வேலுப்பிள்ளை துரைசிங்கம் 416 540 5225

செயற்குழு உறுப்பினர்கள்: -

திரு. சு. குமாரசாமி

திருமதி கலாதேவி விசாகன்

திரு. ச. தயாபரராசா

திரு. கு. வரதராசன்

திரு. க. யோகரத்தினம்

திரு. த. ஜீவரத்தினம்

# நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா நெடுந்தீவுக்கிளை - நிர்வாக அமைப்பு 2013 - 2014

| | | |
|---|---|---|
| போசகர், புலவர், | A.W. அரியநாயகம் | (தலைவர் ப.நோ.கூ.ச. நெடுந்தீவு) |
| | S.P. அருளப்பு | (இளைப்பாறிய R.D.O) |
| தலைவர்: | திரு. எட்வேட் அருந்தவசீலன் | |
| இணைச்செயலாளர்: | திரு. பி. லீலியான் குரூஸ் | |
| | திரு. பி. ஜோன்சன் கென்னடி | |
| பொருளாளர்: | திரு. அ. புவனேந்திரன் | |

துணைத்தலைவர் - அருட்சகோதரி செல்வி . அ. ஜசிந்தாராணி (அதிபர், றோ.க.பெ.கல்லூரி)

**செயற்குழு உறுப்பினர்கள்:**

| | | |
|---|---|---|
| திரு. | க. அரசரத்தினம் | கோட்டக்கல்வி அதிகாரி |
| திரு. | ஏ. சச்சிதானந்தன் | அதிபர் |
| திருமதி | க. தட்சணாமூர்த்தி | அதிபர் |
| திருமதி | தே. வனிதாராணி | அதிபர் |
| திருமதி | சாரதா கிருஸ்ணதாஸ் | அதிபர் |
| திருமதி | ச. பாக்கியநாதன் | அதிபர் |
| திருமதி | ந. கலைவாணி | அதிபர் |
| செல்வி | சி. அகிலாண்டேஸ்வரி | அதிபர் |
| திரு. | சோ. தம்பிராசா | பிரதேச செயலாளர் |
| திரு. | சி. எட்வேட்ராசா | |
| திரு. | இருசேர் ஞானசீலன் | |
| திரு. | ந. தர்மகுமார் | |
| திரு. | ஐ. மயில்வாகனம் | |
| திரு. | இரா அருட்பிரகாசம் | |
| திரு. | ஆ. கந்தையா | |

# பகிர் வாயிலில்......

பூமியில் உயிர்கள் உதயமாவதற்கு முன்னர்
அது வெறும் கற்கோளமாகவே இருந்திருக்கின்றது
என்பதை விஞ்ஞானபூர்வமாக நிரூபித்திருக்கின்றார்கள்.
கற்களில் இருந்து தான் மண் உருவாகியது.
கற்களில் இருந்துதான் மனிதன் நெருப்பைக் கண்டறிந்தான்.
இவ்வாறு உயிரியல் மாறுதல்களுக்கு கற்றல் உந்துசக்தியாக
இருந்திருப்பினும் இவற்றைக் கொண்டு வேலிகள் அமைக்கும்
சிறப்பு எம்தீவுக்கே உரியதாகும். அந்த அற்புதமான வேலிக்கு
அழகு தமிழில் நாம் அழைக்கும் பெயர் **பகிர்**

**பகிர்**
இலங்கைத் தீவின் நெற்றிக்கண் என நிமிர்ந்து நிற்கும்
நெடுந்தீவு உலகில் தனித்துவம் வாய்ந்த தீவாகத் திகழக்
காரணம் **பகிர்** என்று சொல்லப்படும் கல்வேலி மட்டுமல்ல;
அப்பதத்திற்குரிய அத்தனை குணாதிசயங்களையும் கொண்டிருப்பதுந்தான்.
**பகிர்** என்பது பகிர்தல் என்று பொருள்படும். எதை எதை எல்லாம்
பகிர்ந்து கொள்ள முடியுமோ அதை எல்லாம் அழகாகப் பகிர்ந்து
கொள்ளும் எம் மண்ணின் மகத்துவத்தைப் பலவாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

அன்பு காட்டுவதில் அனைவரையும் நெகிழவைக்கும் அன்புப் பகிர்வாய்,
விருந்தோம்பலில் எமக்கு நிகர் எவருமில்லை என்று சொல்லுமளவிற்கு
உணவளிக்கும் உணவுப் பகிர்வாய், உள்ளதை இல்லாதவருடன் பகிர்ந்து
கொள்ளும் உதவிப் பகிர்வாய், மற்றவர் துயரைத் தம்துயர் போல் மதிக்கும்
துன்பப்பகிர்வாய், தான் அறிந்தவற்றை மற்றவர்களுக்கு அறிவுக்கும் அறிவுப்
பகிர்வாய் சொந்த பந்தங்களை எடுத்துக்காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட
காணிப்பங்கு என்னும் நிலப்பகிர்வாய் இப்பகிர் என்னும் பதம் எம் தீவு
மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

இலகுவில் யாராலும் அசைத்து விடமுடியாத பகிர் வேலிகள் தமிழனின்
தனித்துவமான உறுதியையும் வீரத்தையும் அல்லவா வெளிப்படுத்துகின்றன.
இலங்கைத்தீவின் தனி நெடிய தீவாம் எமது நெடுந்தீவின் அத்தனை
சிறப்புக்களையும் சொல்லும் அற்புதமான சொற்பதத்தை ஒரு நூலின்
தலைப்பாக்கி உள்ளோம். அதன் நூழைவாயினூடு உள்நுழைகின்றீர்கள். இந்தப்
பகிர் நூலின் ஒவ்வொரு கற்களும் உங்களுடையது. வார்த்தைகளால்
வரையறுக்க முடி யாத எமது மண்ணின் மகத்துவத்தை முடிந்தவரை **பகிர்**
மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றோம்.
இனி உள் நுழையுங்கள் இது உங்கள் நேரம்



# வாழ்த்துச் செய்தி...

The Rt. Rev. Dr. Daniel S. Thiagarajah ph.D.
Bishop, JDCSL & Chairman, ACM

"நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா" ஒரு தசாப்தகால சேவையைத் தீவக மண்ணில் நிறைவு செய்கின்ற தருணத்தில் இம்மன்றத்தின் புனித சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கனடா தேசத்தைத் தற்போது வாழ்விடமாகவும் கொண்டுள்ள திரு. சு. நடராசா அவர்களது தரிசன வீச்சில் உதயமான இம்மன்றம் கடந்த பத்து வருடங்களாக சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவை பாராட்டத்தக்கது. வறிய மாணவர்களுக்கு உதவி செய்யும் வண்ணம் ஆரம்பிக்கப்பட்ட இச் சேவை நாளுக்கு நாள் புதிய பரிமாணங்களில் விரிவடைந்து ஒரு முழுமையான வாழ்வுக்குரிய பணியாக இப்போது பரிணமித்துள்ளது. தீவகத்திலுள்ள எட்டுப் பாடசாலைகளில் பயிலும் மாணாக்கர் தேர்ச்சியடையும்போது வறுமைநிலையில் உள்ளோருக்கு ஊக்குவிப்பு உதவியளித்தும், புலமைப் பரீட்சையில் சித்தியடைவோருக்கு ரூபா ஐயாயிரத்தை வங்கியில் வைப்பிட்டு சேமிப்புப் புத்தகத்தை வழங்கியும், தமிழ்த்திறன் போட்டிகளுக்குப் பயணிப்பதற்கு வேண்டிய போக்குவரத்துச் செலவினை முழுமையாகப் பொறுப்பெடுத்தும் மாணவர்களுக்கு உதவி செய்யும் வேளையில், பகுதி நேர ஆசிரியர்களுக்கான, குறிப்பாக ஆங்கிலக் கல்வியாசிரியர்களுக்கான, கொடுப்பனவுகளை வழங்கியும் இத்தீவக மண்ணில் கல்வித்தரத்தை உயர்த்தி வரும் இம்மன்றம் போற்றப்படத்தக்கது.

பாடசாலைகளின் தேவை கருதி விளையாட்டு மைதானம் உருவாக்குவதற்கும், தேவைக்கேற்ப கட்டடங்களை அமைப்பதற்கும் தாராள மனதுடன் செய்திட்டப் பங்களிப்பு நெடுந்தீவுவாழ் மக்கள் அனைவராலும் பாராட்டி வரவேற்கத்தக்கதாகவும் என்றும் நினைவிலிருக்கத்தக்கதாகவும் அமைந்துள்ளது. மட்டுமல்ல, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முதியோருக்கு மாதாந்தப் பண உதவி வழங்கி வந்ததும் நாமறிந்ததே. மருத்துவ உதவிகளையும் தாராளமாக வழங்கி உடல்நலம் பேணுவதிலும் சிரத்தையுடையவர்களாய் இம்மன்றத்தினர் இருக்கின்றனர்.

வருடாந்தம் இம்மன்றத்தால் வெளிக்கொணரப்படும் **"பகிர்"** என்னும் மலருக்கு இச் செய்தியை நான் வழங்கும் வேளையில் திரு. நடராசா போன்றவர்கள் இன்னமும் வாழ்வதால் அடியவன் கண்ட தரிசனம் நிறைவாக்கம் பெற்று மக்களின் வாழ்வு முழுமையடைகின்றது என்பதை வலியுறுத்தி, இப் பெரிய தரிசனத்தில் அனைவரும் பங்காளிகளாக மாறி கல்விக்குப் பெயர்பெற்றதும் சிறந்த பல கல்விமான்களை உருவாக்கியதுமான நெடுந்தீவு தொடர்ந்தும் கல்வியின் சிறந்த அடித்தளமாக விளங்க இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

**பேரருட் கலாநிதி டானியல் எஸ். தியாகராஜா**
பேராயர். தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்.

# Jaffna Diocese of the Church of South India

Inaugurated 1947

**AMERICAN CEYLON MISSION**

Founded in 1816

## DELFT CHURCH

1855

Delft
Jaffna

13.11.2013.

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் - கனடா
இதழ் - பகிர்

பகிர் இதழின் 10ம் ஆண்டு நிறைவு மலரின் வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெரு மகிழ்வடைகிறேன். இவ்விதழானது நெடுந்தீவு வாழ் மக்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஆற்றி வரும் சேவைகள் அளப்பரியன. இவர்களது மிக அன்பின் சேவைகள் தொடர்ந்தும் இம்மக்களுக்கு கிடைக்க வேண்டும். இவ்விதழை வாசித்து பலர் பயன் பெறவும் இன்னும் நமது சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் இவ்வாறான முயற்சிகள் வரவேற்கத் தக்கது. இதற்காக வளர்ந்து வருகின்ற எமது சமுதாயம் பல துறைகளில் முன்னேற்றமடைய என்னுடைய வாழ்த்துக்கள். தொடர்ந்தும் இறைவன் எப்போதும் உங்களுடன் தங்க வாழ்த்துகின்றேன்.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
அருட்பணி ஜெ. தாவீது
தென்னிந்திய திருச்சபை
நெடுந்தீவு

The Rev. J. Thaveethu
J.D.C.S.I. Church
Delft



# தலைவரிடமிருந்து....

அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய நெடுந்தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும், கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் வணக்கம்.

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா 10ஆவது ஆண்டு நிறைவு விழாவையும், "பகிர்" மலர் வெளியீட்டு விழாவையும் எமது தாயகமாகிய நெடுந்தீவில் கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றது. எமது மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும், அனைத்து மக்களுக்கும் மன்றத்தின் செயற்பாடுகளைத் தெரியப்படுத்துவதற்கும் மேலும் பல புதிய செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும் உதவியாக இருக்குமென நம்புகின்றோம். 10 ஆண்டுகளில் 25இற்கு மேற்பட்ட செயற்றிட்டங்களைத் தாயகத்தில் செயற்படுத்தியுள்ளோம். இவற்றில் பெரும்பாலானவை மாணவர்களின் கல்வி வளர்ச்சித் திட்டங்களேயாகும். இதனால், பல மாணவர்கள் கல்வி கற்று முன்னேறி வருகின்றார்கள். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கோட்டக் கல்வி அதிகாரி திரு. க. அரசரத்தினம், அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், முன்னாள் பிரதேச சபைத் தலைவரும், மன்றத்தின் காப்பாளருமாகிய புலவர் A.W அரியநாயகம் அவர்கள், கல்விமான்கள், ஆன்மீகத் தலைவர்கள், நண்பர்கள், எமது மன்றத்தின் முன்னாள் தலைவர்கள், அமரர் திரு. இரா. சின்னத்தம்பி அதிபர், திரு. S.P. அருளப்பு R.D.O. திரு. S. கோபாலசிங்கம் முன்னாள் ப.நோ.கூ.சங்கம், திரு. ச. சத்தியவரதன் அதிபர், செயலாளர் திருமதி சாரதா கிருஸ்ணதாஸ் அதிபர், திரு. ஏ. சச்சிதானந்தன் அதிபர், பொருளாளர். அமரர் அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை, திரு. ப. அமலதாஸ் திரு. ப. கேதீஸ்வரன் மற்றும் அனைத்து நிர்வாக உறுப்பினர்கள், தற்போது வழிநடாத்தி வரும் மன்றத்தலைவர் திரு. எட்வேட் அருந்தவசீலன், செயலாளர் திரு. வீவியான் குரூஸ், பி. ஜோன்சன் கென்னடி, பொருளாளர் திரு. அ. புவனேந்தரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் மன்றத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மறைந்த எம் மண்ணின் மைந்தன் அமரர் உயர்திரு. இரா. சின்னத்தம்பி அதிபர் அவர்களுக்கும், றோ.க.பெ. கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் அருட்சகோதரி செல்வி இக்னேசியா சூசைப்பிள்ளை அவர்களுக்கும் மற்றும் மறைந்த எம் ஊர் உறவுகள் அனைவரையும் நினைவு கூர்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்து, குடி தண்ணீர் பிரச்சினை, கனினித்துறை, விளையாட்டுத் துறை, உல்லாசப் பயணத்துறை போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்த உள்ளோம். இதனை செயற்படுத்துவதற்கு உலக நாடுகளில் வாழும் எம் ஊர் உறவுகளின் பங்களிப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றது. நம் மக்கள் பலர் வெளிநாடுகளில் ஊரின் பெயரில் மன்றங்களை அமைத்து விழாக்கள் நடாத்தி வருகின்றார்கள். நீங்கள் எல்லோரும் முடிந்த அளவு ஊருக்கு உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதில் பலருக்கும் விருப்பம் இருக்கலாம், எப்படிப் பட்ட தேவைகள் உள்ளன என்று தெரியாமல் இருக்கலாம். இனிவரும் காலங்களில் ஊருக்கு உதவ விரும்புபவர்கள் நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தினருடன் (கனடா) தொடர்பு கொண்டால் இதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனையும், ஆதரவையும் தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம். தற்பொழுது சுவிஸ் ஒன்றியம் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருகின்றார்கள். அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 2013ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள். இவர்களில் ஒரு மாணவன் தீவுப்பகுதியில் அதிகபுள்ளிகள் பெற்று எமது ஊருக்கும், பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துத் தந்துள்ளார். மேலும் பல மாணவர்களைச் சித்தி பெறச் செய்வதற்குத் தரம் 4, தரம் 5 இரண்டு வகுப்புக்களை ஒன்று சேர்த்து மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்கு விசேட ஆசிரியர்களை நியமித்து வகுப்புக்கள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளோம். சித்தி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

10 ஆண்டுகளாக எமது மன்றத்திற்கு அனைத்து வழிகளிலும் ஆதரவு தந்து உதவி வருகின்ற கனடா வாழ் நல் உள்ளம் கொண்ட எம் ஊர் உறவுகளுக்கும், அவர்களின் வழித்தோன்றல்களுக்கும், நண்பர்களுக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் எனது சார்பிலும், மன்றத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். "பகிர் " மலருக்கு கடந்த 10 ஆண்டுகளாக ஆதரவு வழங்கி வரும் வர்த்தகப் பிரமுகர்களுக்கும், ஆக்கங்கள், ஆசியுரை மற்றும் விழாக்களுக்கு கலை நிகழ்ச்சிகள் தந்து உதவும் நடனப் பயிற்சி ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் எமது மன்றச் செயலாளர், பொருளாளர், உபதலைவர், உப செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது பணிக்கு ஆதரவாக இருந்து வரும் என் மனைவி அஞ்சலா, பிள்ளைகளுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

அன்புடன்

**சுப்பிரமணியம் நடராசா**
தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
கனடா
E.mail: pahir@delftoldstudents.ca
Web: www.delftoldstudents.ca
06.11.2013



# கௌரவ செயலாளரிடமிருந்து....

மதிப்புக்குரிய கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும், அவர்களின் உறவுகள், வழித்தோன்றல்கள், நலன் விரும்பிகள், நெடுந்தீவில் வாழ்ந்து வருபவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கம்.

எமது பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் 2003இல் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டு பல செயல்திட்டங்களை எமது தீவகத்திற்குச் செய்து வருகின்றது. அவற்றில் சில செயற்றிட்டங்களாவன, நெடுந்தீவின் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வறிய, கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளாகப் பண உதவி வழங்கி வருகின்றோம். வருடா வருடம் புதிய மாணவர்களையும் சேர்த்து பல்கலைக்கழகப் படிப்பு முடியும் வரை பணஉதவி வழங்கி வருகின்றோம். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறாத ஆதரவற்ற வறிய முதியவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் கடந்த 10 வருடங்களாகப் பண உதவி வழங்கி வருகின்றோம். வெளி மாவட்டங்களில் கலை, கலாசார விழாக்களுக்கும், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்றும் வறிய மாணவர்களுக்குப் பண உதவி வழங்கி வருகின்றோம். நெடுந்தீவின் பாடசாலைகளின் சில முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ளது. அதற்கு மேலதிக ஆசிரியர்களை நியமித்து மாதாந்த அடிப்படையில் பணஉதவி வழங்கி வருகின்றோம். நெடுந்தீவில் நடைபெறும் சில பொது விளையாட்டுப் போட்டிகளுக்கு வருடா வருடம் சிறு பணத் தொகை வழங்கி வருகின்றோம். பாரிய நோய்களினால் பாதிக்கப்படும் எம்மவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகின்றோம். தற்பொழுது இரண்டு பாடசாலைகளுக்கு ஆரம்ப கணினி வகுப்புகள் நடாத்தி வருகின்றோம்.

நெடுந்தீவு மகா வித்தியாலயம் 1946இல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது ஆரம்ப அதிபராக திரு. C.V. எட்வேட் நவரத்தினசிங்கம் பதவியேற்றுத் தொடர்ந்து 18 வருடங்களாக (1946-1964) சேவையாற்றியுள்ளார். இவர் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளார். உருவாகிய கல்விமான்கள் இலங்கையில் மட்டுமல்லாமல், புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அன்னாரை நினைவு கூருமுகமாக கனடா - நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் திரு. S.P. அருளப்பு அவர்களின் தலைமையில் 06.02.2008 இல் உருவச்சிலைக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு 17.04.2010 இல் கனடாவில் உள்ள நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத் தலைவர் திரு. சுப்பிரமணியம் நடராசாவும், செயலாளர் கணபதிப்பிள்ளை

பொன்னுத்துரை ஆகியோரால் நெடுந்தீவின் கல்வித் தந்தை அமரர் உயர் திரு C. V. எட்வேட் நவரத்தினசிங்கத்தின் திரு உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்பட்டு மகா வித்தியாலய அதிபர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ் அவர்களின் தலைமையில் விழா நடைபெற்றது. அன்னாரின் நூற்றாண்டு விழாவும் மகா வித்தியாலயத்தில் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எமது மன்றத்தின் 2012 "பகிர் " மலரில் நெடு. சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் இ. திவ்யா, தனக்குப் பாடசாலை செல்வதற்குத் துவிச்சக்கர வண்டி தேவையாகவுள்ளது எனத் தெரிவித்திருந்தார். " பகிர்" மலரை வாசித்த யா/ கொக்குவிலைச் சேர்ந்த திரு. மயில்வாகனம் விஜயநாதன் ( கனடா) அவர்கள் செல்வி இ. திவ்வியாவுக்குத் துவிச்சக்கர வண்டியை அன்பளிப்புச் செய்துள்ளார். நான் 2013 மே மாதம் நெடுந்தீவுக்குச் சென்ற போது மாணவிக்குத் துவிச்சக்கர வண்டியைக் கையளித்தேன். துவிச்சக்கர வண்டியை அன்பளிப்புச் செய்தவருக்கு எமது மன்றத்தின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மன்றத்திற்கு பல வழிகளிலும் ஆதரவு தருகின்ற கனடா வாழ் நெடுந்தீவைச் சார்ந்த உறவுகளுக்கும் விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் 10ஆவது ஆண்டு மலருக்கு ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும், நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோருக்கும் நெடுந்தீவுக் கிளையின் முன்னைய நிர்வாகத்தினருக்கும் தற்போதைய நிர்வாகத்தினருக்கும் நெடுந்தீவுப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், நெடுந்தீவில் வாழும் மக்களுக்கும் எமது மன்றத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சிறகு பெற்றும் கூடு மறவோம்"

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**
கௌரவ செயலாளர்
நெ. பா. ப. மாணவர் மன்றம்
கனடா
T. P. 6477746154
06.11.2013



## நிதியாளரிடமிருந்து........

நாம் பிறந்து வளர்ந்த மண்ணையும், உறவுகளையும், நண்பர்களையும் பிரிந்து, அகதிகளாக வாழ்ந்தும் இன்னும் நாம் பிறந்த மண்ணையும், மக்களையும் நேசிக்கும் இங்குள்ள நல் உள்ளம் படைத்தவர்கள் இயன்ற உதவியைச் செய்வதினால் இன்று 10ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். இதற்குத் தமது ஆதரவை அளித்த அத்தனை உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எனதுமுதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2003ஆம் ஆண்டு நாங்கள் மன்றத்தை ஆரம்பித்தபோது முதல் விடயமாக வறுமைக் கோட்டின்கீழ் உள்ள பிள்ளைகளுக்குக் கல்விக்கான முழு உதவியும் செய்து கொடுக்க வேண்டும் என்பதே. நாங்கள் இங்குள்ள தாயகத்தின் உறவுகளிடம் போய் வேலைத் திட்டங்களை விபரமாக சொல்லியபோது, அவர்களின் ஒத்துழைப்பினைத் தருவதாகச் சொன்னார்கள். அதன் பயனாக இன்று எத்தனையோ பிள்ளைகள் படிப்பதற்கு உதவி செய்து வருகின்றார்கள். இன்று அந்தப் பிள்ளைகள் படித்து முடித்து வேலை செய்து தங்களின் குடும்பத்தைப் பார்க்கின்றார்கள். தொடர்ந்து தாயகத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றோம். அங்கு உள்ள சில பாடசாலைகளில் கணினி வகுப்புகள் நடாத்தி வருகின்றோம். சீக்கிரியாம்பள்ளம் வித்தியாசாலைக்குக் காணி வாங்கிக் கொடுத்துள்ளோம். நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கிக் கொடுத்துள்ளோம். சைவப்பிரகாச வித்தியாலயம் 86ஆவது ஆண்டு விழா கொண்டாடுவதற்கு உதவி செய்துள்ளோம். கடந்த பத்து ஆண்டுகளில் 25 இற்கு மேற்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளோம்.

நெடுந்தீவின் கல்வித்தந்தை அமரர் உயர்திரு. எட்வேட் நவரத்தினசிங்கம் அதிபர் அவர்களுக்கு சிலை வைக்க வேண்டும் என்பதற்காக நிதி சேர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்தோம். அதன் பலனாக அவரது உருவச் சிலையை 17.04.2010 மகாவித்தியாலயத்தில் நிறுவியுள்ளோம். இதற்கு நிதி உதவியாளர்கள் நெடுந்தீவு மக்கள் மட்டுமல்ல, இவரைத் தெரிந்தவர்கள், அவருடைய ஊரைச் சேர்ந்தவர்கள் கூட அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2003ஆம் ஆண்டு எங்கள் மன்றத்தின் கிளை நிறுவனம் ஒன்றை நிறுவினோம். அதற்கு அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்கள் தலைவராக இருந்து அங்கு உள்ள தேவைகளை அறிந்து

எங்களுக்குத் தெரியப்படுத்தினார். அதை நாங்கள் பரிசீலனை செய்து முக்கியமான விடயங்களை உடனே செய்து கொடுத்தோம். அவருடன் சேர்ந்து உதவி செய்த நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அதே ஆண்டு இங்கு உதவி செய்த நிர்வாகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2006ஆம் ஆண்டு நிர்வாகத்தை மாற்றி திரு. S.P. அருளப்பு (இளைப்பாறிய R.D.O) அவர்கள் தலைவராகத் தெரிவானார். அவரும் திறம்பட இங்குள்ள வேலைத் திட்டங்களைத் தெரிவித்து அவற்றைச் செய்து வைத்தார். அவருடன் உழைத்த சக உறுப்பினர் களுக்கும் நன்றி. அதே காலம் இங்கு இருந்த நிர்வாகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்று தாயகத்தின் தலைவராக இருக்கும் எட்வேட் அருந்தவசீலன் தலைவராக இருந்து அங்கு செய்த சேவைகளுக்காக அவரையும், சக உறுப்பினர்களையும் பாராட்டுகிறோம். தாயகத்தில் வாழுகின்ற முதியோர்கள் பற்பல இன்னல்களின் மத்தியில் வாழ்கின்றார்கள். எந்த உதவியும் இல்லாத முதியோர்களைத் தெரிவு செய்து மாதாமாதம் நிதி உதவி செய்து வருகின்றோம். இன்னும் பல முதியோர்கள் வறுமையில் வாழ்கின்றார்கள்.


இங்கு இருந்து உறவினர்கள், நண்பர்கள் தாயகத்திற்கு வருகின்றார்கள். உங்கள் துன்பங்களை நேரில் காண்கிறார்கள். தாயகத்தில் உள்ள நீங்கள் தான், உங்கள் கஷ்டங்களையும் தேவைகளையும் எங்களுக்கு அறியத்தர வேண்டும். உங்கள் நிலையைப் பார்த்தாவது நம் உறவுகள் உதவிகளைச் செய்வதற்கு முன் வரட்டும். மரணச் சடங்கு செய்வதற்கு வசதியில்லாதவர்களுக்கும் நாம் உதவி செய்கிறோம். கனடாவில் உள்ள நம் தாயகத்தின் உறவுகளே! கருத்து வேறுபாடுகளை விட்டு விட்டு நம் தாயகத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்களுக்கு உதவி செய்ய முன் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நாம் இங்கு போதிய வசதிகளுடன் வாழ்கின்றோம் என்பதை மனதில் நினைத்துப் பாருங்கள்.

பத்து ஆண்டுகளாக "பகிர்" மலரை வெளியிடும் போது எங்களுக்கு இங்கு விளம்பரம் தரும் வர்த்தகர்கள், வீடுமுகவர்கள், டாக்டர்கள், சட்டத்தரணிகள் எல்லோருமே நமது ஊரைச் சேர்ந்தவர்கள் இல்லை எனினும் எமது வேலைத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு தான் எமக்கு உதவி செய்கின்றார்கள். இவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் மேலும் எமது சங்கம் வளர எல்லோரும் ஒன்று திரண்டு வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

**சின்னத்தம்பி சண்முகநாதன்**
நிதியாளர்
நெ. பா. ப. மாணவர் மன்றம்
கனடா
தொ.பே.: 647 712 6714



## உப தலைவரிடமிருந்து ......

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும், நெடுந்தீவில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு திறம்பட செயற்படுத்தி வரும் நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்ற உப தலைமை முக்கியமான சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஏழு ஆண்டுகள் காலமாக தலைவர் நடராசாவும், அவரோடு சேர்ந்த நிர்வாக உறுப்பினர்களும் தான் தொடர்ந்த இருக்கிறார்களே என்பது முதல் கேள்வி. நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்துடன் சேர்ந்து ஒன்று பட்ட சங்கமாக எமது சங்கமும் இருக்கலாமே என்பது இரண்டாவது கேள்வி. இக்கேள்விகளுக்கு நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் பதில்களைச் சொல்லித் தான் ஆக வேண்டும்.

நெடுந்தீவிற்கென்று ஒரு சங்கம் ஆரம்பித்த காலத்தில் அதாவது 1993ஆம் ஆண்டு நானும் ஒரு நிர்வாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். அப்போது நெடுந்தீவுப் பழைய மாணவர் சங்கம் என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் தலைவர் திரு. சு. நடராசா காலத்தில் வன்னிவாழ் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கி மக்கள் ஒன்றியமாக பெயர் மாற்றப்பட்டு சிறிது காலம் செயற்பட்டு வந்தது. அதன் பின் வந்த நிர்வாகத்தினர் நெடுந்தீவில் செய்யப்பட்டுக்கொண்டிருந்த செயற்றிட்டங்களுக்கு அனுப்பும் பணம் பற்றாக்குறை காரணமாகவும், கனேடிய நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்ற சித்தாந்தத்துடன் பணம் அனுப்புவதை நிறுத்தினார்கள். இந்நிலையில் சில உறுப்பினர்களுடனும், நண்பர்களுடனும் சேர்ந்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். அவர்களுக்கு நெடுந்தீவின் அத்தியாவசியத் தேவைகள் பற்றியும், அங்குள்ள வறிய மாணவர்கள், வறிய முதியோர்கள் மற்றும் பல தேவைகள் பற்றி எடுத்துக் கூறினார். அது மட்டுமல்ல வன்னிப் பெருநிலப்பரப்பைக் கொண்ட பிரதேசம் அத்தோடு ஒவ்வொரு குடியேற்றத் திட்டங்களுக்கு ஒவ்வொரு சங்கங்கள் உண்டு. அதனால் நாம் பிறந்த மண்ணை மறவாமல் எமது நெடுந்தீவோடு மட்டும் நின்று விட்டால் போதும் இல்லையேல் இதை எங்களால் தொடர்ந்து நடத்துவது மிகவும் சிரமம். இது பற்றி நெடுந்தீவில் உள்ள முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சின்னத்தம்பி அவர்களுடனும், பாடசாலை அதிபர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுடனும் கலந்து ஆலோசித்து 2003ஆம்ஆண்டு நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா ஆரம்பித்தார்.

நெடுந்தீவிற்கு பல புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள படிக்கக் கூடிய வறிய மாணவர்களுக்கு வழங்கி கல்வி கற்பதை ஊக்குவித்தல், தரம் 5 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மேலதிக வகுப்புக்களை நடாத்துதல், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள முதியவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பணம் வழங்குதல், பாரிய நோய்களினால் பாதிக்கப்படுபவர்களுக்குப் பண உதவி செய்தல், வறிய முதியோர்களின் மரணச் செலவுகளுக்கும் பண உதவி செய்தல், பாடசாலைகளின் அபிவிருத்தித்திட்டங்கள் என இன்னும் பல. இந்த வருடத்துடன் 10 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது. இதுவரை காலமும் 25 இற்கு மேற்பட்ட செயற்றிட்டங்களை நிறைவேற்றியுள்ளது. மேலும் 10இற்கு மேற்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நெடுந்தீவு மக்களாகிய நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உங்களால் உணர முடியும். தலைவர் அவர்கள் தன் நண்பர்களோடு சேர்ந்து எடுத்த முயற்சியைத் தன் உயிர் இருக்கும் வரை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயற்படுத்திக் கொண்டிருப்பதை சாதாரண மனிதர் யாரும் நினைக்க முடியாது. இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. நெடுந்தீவைப் பொறுத்த மட்டில் அந்த நாளையில் அரச ஊழியர்களின் பிள்ளைகள், வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் தான் யாழ்ப்பாணம் சென்று மேற்படிப்பைத் தொடர முடியும். எத்தனையோ நன்றாகப் படிக்கக் கூடிய பிள்ளைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தபடியால் வன்னிக்குச் சென்று விவசாயமும் கூலிவேலையும் செய்து வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டிய நிலை இருந்தது.


பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் என்றால் அங்கு கல்வி கற்ற மாணவர்கள்தான் யோசிக்க வேண்டும். ஆரம்பக் கல்வி வாழ்க்கை எல்லாவற்றையும் நெடுந்தீவிலே கற்றுக் கொண்டு நாங்கள் இன்று நல்வாழ்க்கை வாழ்கின்றோம் என்றால் அது அந்த மண் தந்த கொடை. அதேமாதிரி அங்குள்ள பிற் சந்ததியினரையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எல்லாவற்றையும் மறந்து ஒவ்வொரு மாணவரும் உங்கள் சுயநலனைக் கலந்து வேறு வேறு பாதைகளை நோக்கிச் சென்றீர்களாய் இருந்தால் நாம் பிறந்த தாய் மண்ணில் வாழும் சிறார்கள் சீர்குலைந்து அந்நிய அரக்கர்கள் கையில் சிக்கிக் கொள்வார்கள். இதை ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். இந்த "பகிர் " மலர் வெளிவருவதன் நோக்கம் ஒவ்வொரு பழைய மாணவனும் இதை வாசித்துச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே. எல்லா வெளிநாடுகளிலும் உள்ள மாணவர்களாகிய நீங்கள் சிறிய, சிறிய உதவியை மாணவர் சங்கங்களுக்கு ஊடாகச் செய்து இந்தப் பணியைத் தொடர வேண்டும். நெடுந்தீவு மண்ணில் வாழும் குழந்தைகளை வாழ வைப்போம் என்று ஒன்றுபட்டு உதவுவோம் என்பதை உங்கள் நெஞ்சில் நிறுத்துங்கள். தாய், தகப்பன் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும், அதிகமான பிள்ளைகளுக்கு அந்த தீவகத்தின் நிலவரம் தெரியாது. எனவே அங்கு படித்த மாணவர்களாகிய நீங்கள் யோசியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் எடுத்துக் கூறுங்கள். எங்களைப் போல் அங்குள்ள பிள்ளைகளும் படித்துப் பட்டதாரிகளாக வர வேண்டும் என்று சிந்தியுங்கள். ஊரின் பெருமையைக்

கட்டியெழுப்ப வேண்டும். ஒரு உதாரணத்திற்குச் சொல்லுவார்கள், "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்று. என்ன கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடிக்கின்றீர்கள்? கண்களைத் திறவுங்கள். உங்களை அன்போடு கேட்கின்றோம். உங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆசையை வெளியே கொண்டு வந்து நெடுந்தீவு வறிய தீவு என்று சிந்தித்து மூன்று குறிச்சியையும் யோசித்துப் பாருங்கள். அங்குள்ள மக்களை மாணவர்களை, முதியவர்களை யோசியுங்கள். அங்கு பிறந்து கல்வி கற்றவர்கள் நீங்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். அந்த நாளையில் சாதாரண கொப்பி, பேனா, பென்சில், புத்தகம், உடுப்புக்கள் போன்றவற்றை எல்லோராலும் எல்லாவற்றையும் வாங்க முடிந்ததா? என்னைப் பொறுத்த மட்டில் எத்தனையோ சில புத்தகங்களை வாங்க முடியாமல் ஆசிரியர் வகுப்பிற்கு வெளியே நிற்க விட்டிருக்கிறார். என்னால் தொடர்ந்து படிக்க முடியாமல் போனதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். நல்ல உடுப்பு வாங்க முடியாத நிலை தோளினால் கிழிந்த சேட்டை உள்ளுக்குத் துணியை வைத்து நானே தைத்துப் போட்டுக் கொண்டு போய் இருக்கிறேன். இதனால் எல்லாப் பிள்ளைகளோடும் என்னால் சரிசமமாகச் சேர்ந்து பழக முடியவில்லை. எனக்குள்ளே ஒரு தாழ்வு மனப்பான்மை. இப்படியான சோதனையில் வாழ்ந்தபடியால் தான் இந்த நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தில் இணைந்தேன். செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றேன். இந்த வேதனைகளை அங்குள்ள பிள்ளைகள் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே இதனை எனது உள்ளத்தில் இருந்து வந்த உணர்வுகளோடு எழுதுகின்றேன்.

நன்றி.

அன்புடன்

**இராமநாதன் கந்தையா**
உபதலைவர்
நெ. பா. ப. மாணவர் மன்றம்
கனடா.



# துணைச் செயலாளரிடமிருந்து ......

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடாவின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் "பகிர்" மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி யடைகின்றேன்.

மன்றத்தின் கடந்த 10 ஆண்டு கால வளர்ச்சியை எடுத்து ஆராய்வோமானால் சிறிய தொகையான அங்கத்தவர்களைக் கொண்டிருந்த பொழுதிலும் 25க்கு மேற்பட்ட பாரிய செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அதன் அடிப்படையில் செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. எமது மன்றத்தினால் சேகரிக்கப்படும் பணம் நெடுந்தீவில் உள்ள மாணவர் மன்றக் கிளைக்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலமாக உரியவர்களுக்குப் பண உதவித் தொகை வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கும், ஆதரவற்ற முதியவர்களுக்கும், பாரிய நோய்களினால் பாதிக்கப்பட்டோருக்கும் மருத்துவ நிதியாகவும் முன்னுரிமை அளிக்கப்பட்டுப் பணம் வழங்கப்படுகிறது.

மன்றத்தின் செயற்பாடுகள் பற்றி அறிய விரும்புபவர்கள் நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா உடன் அல்லது நெடுந்தீவுக் கிளையுடனோ தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம். மன்றத்திற்கு உதவி செய்ய விரும்புபவர்கள் மன்றத்தினருடன் தொடர்பு கொண்டு ஆதரவு வழங்கலாம். என்னிடம் சிலர் கேட்கிறார்கள் ஒரு குறிக்கப்பட்ட நிர்வாகத்தினரே தொடர்ந்து இம் மன்றத்தை இயக்குகின்றார்கள் என்று, அது உண்மைதான். ஆனால் கடந்த பத்து வருடங்களாக 25இற்கும் மேற்பட்ட திட்டங்களை எமது தாயகமாகிய நெடுந்தீவில் செயற்படுத்தி உள்ளோம். மேலும் பல செயற்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இனி வரும் காலங்களில் இப்படியான கேள்விகளைக் கேட்பதைத் தவிர்த்து எமது மன்றத்துடன் சேர்ந்தோ, அல்லது வெளியிலிருந்தோ ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நெடுந்தீவைச் சேர்ந்த மக்களிடமும் அவர்களின் உறவினர்களிடமும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் தாங்கள் கனடாவில் உள்ள மாணவர் மன்றத்திற்கோ அல்லது நெடுந்தீவில் உள்ள மாணவர் மன்றக் கிளையுடனோ தொடர்பு கொண்டு உங்களால் இயன்ற பண உதவி செய்து மேலும் பல செயற் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உதவும்படி கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் உதவும் சிறிய தொகை எதிர்காலத்தில் ஒருவருடைய வாழ்க்கையை உயர்வு பெற உதவும் என்பதில் ஐயமில்லை

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

நன்றி

**வேலுப்பிள்ளை துரைசிங்கம்**
உப செயலாளர்
நெ. பா. ப. மாணவர் மன்றம்
கனடா.

5.14.2013



## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் ஒன்றியம் - கனடா 10 ஆண்டுகள் பூர்த்தி விழாவிற்கான வாழ்த்துச்செய்தி

எமது தாயகமாம் நெடுந்தீவில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் எமது உறவுகள் ஒன்றிணைந்து மேற்படி ஒன்றியத்தை அமைத்து அதனூடாக தாயகத்திற்கான மேம்பாட்டையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பல்வேறு உதவித் திட்டங்களூடாக கடந்த பத்து ஆண்டுகளாக செய்யப்பட்டு வருவது மிகவும் பாராட்டக்கூடியதும், மகிழ்ச்சியடையக் கூடிய விடயமாகும்.

எமது பகுதிகளில் போர் நெருக்கடிகள் உச்சம் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே கனடாவாழ் எமது உறவுகள் எம்முடன் தொடர்பு கொண்டு தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கான தங்களின் விருப்பத்தை தெரிவித்ததன் அடிப்படையில் கனடா ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டு ஆங்கிலக்கல்விக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன: தொடர்ந்து ஆசிரியர் பற்றாக்குறையான பாடங்களுக்கான வகுப்பும், பகுதிநேர மேலதிக வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பிட்டகாலத்தின் பின்னர் கனடா ஒன்றியத்துக்கு அகத்திலும்,புலத்திலும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தொடர்ந்து செயற்படமுடியாமல் இருந்த நிலமையில் உள் முரண்பாடுகள் எமது நோக்கத்திற்கு இடையூறாக அமைய முடியாது என்பதை மனதில் கொண்டு நெடுந்தீவு பாடசாலையின் பழைய மாணவர் ஒன்றியம் - கனடா என்ற அமைப்பை திருவாளர். நடராசா அவர்கள் கடந்த 10 ஆணடுகளிற்கு முன்பு ஸ்தாபித்து அதனூடாக இன்று தீவகத்தில் பல்வேறு உதவித்திட்டங்களினூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் ,ஏழை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியையும் முதன்மைப்படுத்தி தொடர்ச்சியான உதவிகள் வழங்கிவருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக இவ் உதவித்திட்டங்களூடாக நன்மையடைந்தோர் வாழ்வில் ஏற்பட்ட முன்னேற்றங்களை எல்லோரும் நேரடியாக அறியக்கூடியதாகவுள்ளது. "சிந்தனை நல்லது வேண்டும்" "அந்த சிந்தனை செயலுருப்பெற வேண்டும்" நல்ல சிந்தனை மனதில் ஏற்பட்டால் அதை செயற்படுத்தும் சந்தர்ப்பமும் எம்மைத் தேடி வரும் அதை நாம் முறையாகப் பற்றிக்கொண்டால் நிலையான முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாததாகும். இந்த அடிப்படையில் திருவாளர் நடராசா அவர்களின் சிந்தனை செயலுருப்பெற்று அகத்திலும் புலத்திலும் உள்ள நல்ல உள்ளங்களின் செயற்பாடுகள் காரணமாக பத்து ஆண்டுகள் பூர்த்தி செய்து தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது.

இந்த ஒன்றியத்தின் வளர்ச்சிக்காகவும் செயற்பாட்டுக்காகவும் அகத்திலும் புலத்திலும் செயற்பட்டு வரும் நல் உள்ளங்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் நன்றியுணர்வோடு நினைவு கூறுகின்றேன் குறிப்பாக கனடாவில் செயற்படும்.

திருவாளர் சு. நடராசா (ஸ்தாபகர், தலைவர்), திருவாளர் க. பொன்னுத்துரை (செயலாளர்) திருவாளர். ச. சண்முகநாதன் (செயலாளர்), திருவாளர். வே. துரைசிங்கம், திருவாளர். இ. கந்தையா, திருவாளர். த. குமாரசாமி, திருமதி. கலா, திருவாளர் த. செல்வா,

இவர்களின் சிந்தனையும் திட்டத்தையும் தமது தலைமேற் கொண்டு தீவகத்தில் அல்லும்,பகலும் பாடுபட்டுவரும் திருவாளர் எ. அருந்தவசீலன் (தலைவர்), திரு. எ. ஜோன் கெனடி, திரு. எஸ். பி. அருளப்பு திரு. அ. புவனேந்திரன் மற்றும் சகல பாடசாலைகளின் அதிபர்கள், அனைவருக்கும் நன்றியையும் ,பாராட்டை கூறி நிற்கின்றேன். தங்கள் பணி என்றும் தொடர எனது வாழ்த்துக்கள். தீவக மக்களும் உங்களை நன்றியுணர்வோடு நினைவு கூறுவார்கள் என்பது நிதர்சனம். இவ் ஒன்றியம் தொடர்ந்தும் தனது சேவைகளை கனடா வழங்கவும், தங்கள் பத்து ஆண்டுகள் நிறைவு விழா சிறப்புறவும் வாழ்த்துகின்றேன்.

**ஜே. எக்ஸ். செல்வநாயகம்**
உதவிச்செயலாளர்,
ஆளுநர் செயலகம்,
வடமாகாணம்

13.11.2013

## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா



### செயற்குழு உறுப்பினர்கள் 2013 - 2014

இருப்பவர்கள் - இடமிருந்து வலம் : திருமதி கலாதேவி விசாகன் (செயற்குழு உறுப்பினர்), திரு. சு. குமாரசாமி (செயற்குழு உறுப்பினர், திரு. இ. கந்தையா (உபதலைவர்), திரு. சு. நடராசா (தலைவர்)

நிற்பவர்கள் - இடமிருந்து வலம் : திரு. க. பொன்னுத்துரை (கௌரவ செயலாளர்) திரு. வே. துரைசிங்கம் (உப செயலாளர்) திரு. சி. சண்முகநாதன் (நிதியாளர்)

சமூகமளிக்காதோர் : திரு. கு. வரதராசன் (செயற்குழு உறுப்பினர்), திரு. க. யோகரத்தினம் (செயற்குழு உறுப்பினர்) திரு. ச. தயாபரராசா (செயற்குழு உறுப்பினர்), திரு. த. ஜீவரத்தினம் (செயற்குழு உறுப்பினர்)


நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்
நெடுந்தீவு கிளையின் நிர்வாக அணியினர் - 2013


நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்
பகிர் மலர்க்குழு - 2013

ප්‍රාදේශීය ලේකම්
பிரதேச செயலர்
Divisional Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone
021 -321 4239
021 321 5349
021 300 2715

දුරකථනය
தொலைபேசி
Telephone
021 -321 4239

ෆැක්ස්
பக்ஸ்
Fax

E-mail: dsdelft@gmail.com

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, ඩෙල්ෆ්ට්.
பிரதேச செயலகம், நெடுந்தீவு.
**Divisional Secretariat, Delft.**

මගේ අංකය
எனது இல.
My No: D/DS/PRO/DI

ඔබේ අංකය
உமது
Your No.

දිනය
திகதி
Date 2013.12.09

---

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா, நெடுந்தீவு கிளையினரின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றோன்.

நெடுந்தீவானது சிறப்பான பண்பாட்டையும், அது தொடர்பான முன்னிலையான செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்குள்ள மக்கள் தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ்விக்கின்ற உயர்ந்த பண்பைக் கொண்டுள்ளதுடன், நன்றியறிதலையும் கொண்டிருப்பது சால்பாகும். இதன் அடிப்படையிலேயே நெடுந்தீவு பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் தற்போது கனடாவில் வசிப்பினும் தமது தலைமுறையினரதும், மக்களதும், மண்ணினதும் மீதுள்ள அன்பு, அக்கறை என்பன காரணமாக தமது உழைப்பின் ஒரு பகுதியினை, **பெற்ற வீடும் பிறந்த பொன்நாடும் நற்றவை யாவினும் நனிசிறந்தனவே** என்பதற்கிணங்க ஒதுக்கி, சிறப்பான செயல்களைச் செய்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் மேற்படி ஒன்றியம் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு, முதியோருக்கான கொடுப்பனவு, நோயாளிகளுக்கான நிதியுதவி, மாணவர்களுக்கான உதவிகள், வரலாற்று ஆசான்களுக்கான நினைவுச் சின்னங்கள், பாடசாலைகள்,சமூக நிறுவனங்களுக்கான உதவிகள் என பல பணிகளை பலனை எதிர்பாராது செய்து வருகின்றனர்.

பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் சேவையினை இலக்காகக்கொண்டு செயற்பட்டுவருகின்ற இவ் அமைப்பு கல்விக்கு முக்கியத்துவமளித்து செயற்படுவது பாரதியாரின் **"அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"** என்பதற்கிணங்க, எதிர்காலத்தில் நற்பண்புள்ள, கல்வியாளர்களை உருவாக்குவதில் தனக்குரிய பணியினை ஆற்றும் என நம்புகின்றேன்.

இவ்வாறான பல சேவைகளை பலன் கருதாது செய்து வருகின்ற இவ் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோன்.

ஆழ்வாப்பிள்ளை சிறி,
பிரதேச செயலாளர்,
நெடுந்தீவு.

Aluapillai Siri
Divisional Secretary
Delft



# என் மனதின் எதிரொலி......

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் ஒருவன் பெற்ற தாயை எவ்வளவு நேசிக்கின்றானோ அதே அளவு தான் பிறந்த மண்ணையும் நேசிப்பான். இந்த வகையில் என் தாய்மண்ணாம் நெடுந்தீவை நோக்கி 30 வருடங்களின் பின் சென்ற போது என் உணர்வை உள்ளத்து நெகிழ்வை இதில் சற்று மேலோட்டமாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இராமர் வனவாசம் சென்றது 14 வருடங்கள். பஞ்ச பாண்டவர் அஞ்ஞாத வாசம் சென்றது 5 வருடங்கள். இவையெல்லாவற்றையும் மிஞ்சியது எம் மண்ணின் மக்களின் கதை. இவை ஒரு ராமாயணமாகவோ, மகா பாரதமாகவோ வர சந்தர்ப்பம் வரவில்லை. ஆனால் அதையெல்லாம் விடக் கடும் துயர் நிறைந்தது எம் தமிழ் மக்களின் நிலை என்பதை நான் என் ஊரை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கையில் உணர்ந்தேன். குறிகாட்டுவான் கரையில் கடல் அலையின் தாலாட்டிலும், கடற்காற்றின் வருடலிலும் நிற்கும்போது 30 வருடங்களின் முன் நான் சிறுமியாக, பருவப் பெண்ணாக நின்ற நினைவுகள் ஆட்டோகிராப்பாக வெள்ளித்திரையாக... வள்ளத்தின் உள்ளே ஏறி இருந்ததும் யாரையுமே அடையாளம் தெரியாத புதிய முகங்கள் ஏதோ அன்னியப்படுத்தப்பட்டதாக ஒரு உணர்வு தொண்டையை நெருட, கடற்காற்றின் உப்போடு கண்ணீரின் உப்பும் கலக்க அருகில் இருந்த ஓர் குரல், "நீங்கள் முள்ளி கற்பகம் அக்காவின் மகளல்லவா?" திரும்பிப் பார்க்கிறேன். ம்...கூம்... அடையாளம் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இன்னமும் என் தாய் தந்தையை மறக்கவில்லை எனும் உணர்வு உப்புக் கரித்த கண்ணீரை இனிப்பாக்கியது. அதன் பின்னர் சற்று உறவுகளுடன் கலந்த உணர்வு. வள்ளம் மாவிலி கரையை அண்மிக்க அண்மிக்க நெஞ்சுக்குள் சொல்ல முடியாத படபடப்பு, என் ஊருக்கு வந்து விட்டேன் என்பது ஏதோ என் தாயின் அருகில் வந்த உணர்வு. 'என் சனமே, என் இனமே என்னை உனக்குத் தெரிகிறதா?' என் கால்களில் இருந்த செருப்பைக் கழட்டிக் கையில் எடுத்துக் கொண்டு என் வெற்றுக் கால்களை என் மண்ணில் பதித்தேன். அப்பப்பா அந்த உணர்வை அப்படியான ஒரு நிலையில் அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். அதை வார்த்தைகளால் வருணிக்க முடியாது.

30 வருட காலப்பிரிவின் மாற்றம் மக்கள் முகங்களில் தெரிந்தது. சிறுவர்கள் இளம் வயதினராகவும், இளம் வயதினர் முதியவர்களாகவும் மாறி இருந்தாலும், ஊரில் பெரிய மாற்றத்தினைத் தெரியவில்லை. புதியவை புகுந்தாலும் எம் ஊருக்கே சிறப்பான சில அடையாளங்கள் அதை மாற்றவில்லை. பகிர் வேலி, தூரத்தே கேட்கும் கடல் அலை சத்தம், சற்று வருடிக் கொண்டிருக்கும் கடற்காற்று, கடற்காற்றிற்கு நடனமிடும் தென்னங்கீற்றுக்கள் ஊடே

நிறைந்து நிற்கும் பனை மரங்கள், இன்னும் தன்னிலை மாற்றாத "நான் என நெஞ்சை நிமிர்த்தி நிற்கும்" தீவைக் கண்டு கொண்டேன். அங்குள்ள அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர்மக்கள் அனைவரையும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். எமது மன்றத்தின் நெடுந்தீவுக்கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், மற்றும் நிர்வாக உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினேன். அவர்கள் மன்றத்தின் 10 ஆண்டுகளின் செயற்பாட்டையும், எமது ஊர் உறவுகளின் அர்ப்பணிப்புகளையும் பாராட்டியதுடன் தொடர்ந்தும் ஆதரவு தர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன், அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

கனடாவில் வாழ்ந்தாலும், எனது ஊர் மக்கள் இவர்களுக்கு எனது சிறிதளவு உதவியாவது போய்ச் சேர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தில் இணைந்து கொண்டேன். இத்துடன் 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்த பத்தாண்டுகளிலும் இந்த மன்றம் அளப்பரிய சேவை செய்திருக்கிறது. தலைவர் சு. நடராசா அவர்களின் தலைமையில் எவ்வளவு துன்பம் இன்னல்கள் எதிர்ப்புகள் வந்த போதிலும் அவற்றை எல்லாம் சமாளித்து எமது ஊருக்காக எமது மக்களுக்காக நாங்கள் வாழ வேண்டும் என்பதை நிலை நிறுத்தியபடியால் இவ்வளவு தூரம் இந்தச் சங்கம் வளர்ச்சி அடைந்துள்ளது. 10 ஆண்டுகளில் இந்தச் சங்கம் எவ்வளவு சேவை செய்து இருக்கிறது என்பதை எங்கள் ஒவ்வொரு ஆண்டு "பகிர் " என்ற மலர் மூலம் அறிந்திருப்பீர்கள். எமது மன்றம் சிறிய அங்கத்தவர்களுடன் இவ்வளவு காரியங்களை நிறைவேற்றி இருக்கிறது என்றால் மிகையாகாது. இதற்கு அயராது உழைத்துக்கொண்டிருக்கும் தலைவருக்கும், செயலாளருக்கும், பொருளாளருக்கும் எப்பவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றோம். அத்துடன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் செயற்குழு உறுப்பினர்கள் உதவிக் கரம் நீட்டிக் கொண்டு இருக்கும் மக்களுக்கும் எனது நன்றிகள். மற்றும் எங்களின் இந்தச் செயற்திட்டங்களுக்கு எமது மன்றத்திற்கு உதவி செய்து கொண்டிருக்கும் நெடுந்தீவுக்கிளைத்தலைவர் திரு. எட்வேட் அருந்தவ சீலன் அவர்கள் தன்நலம் கருதாது உழைத்துக் கொண்டு இருப்பதை மறக்கவே முடியாது. அவருக்கும், நெடுந்தீவு நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் மேலும் மேலும் வளர்ந்து எமது ஊருக்கு நிறைய உதவி செய்ய வேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திருமதி கலாதேவி விசாகன்**
செயற்குழு உறுப்பினர்
நெ. பா. ப. மாணவர் மன்றம்
கனடா

# நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா

**2003இல் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 10 வருடங்களில் கீழ்வரும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.**

1. நெடுந்தீவில் உள்ள 8 பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பணம் வழங்கியது.

2. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு விசேட ஆசிரியர்களை நியமித்து பணம் வழங்கியது.

3. சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களினால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணம் வழங்கியது.

4. சைவப்பிரகாச வித்தியாலயத்திற்குக் கற்பிப்பதற்கு புத்தகங்கள், பாடசாலைத் தளபாடங்களுக்கு பணம் வழங்கியமை.

5. சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 86ஆவது ஆண்டு விழா மலர் வெளியீட்டுச் செலவு முழுவதும் ஏற்று பணம் வழங்கியமை.

6. சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு மதில் கட்டி, நுழைவாயில் அமைத்துக் கொடுத்தது.

7. சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கிக் கொடுத்துள்ளோம்.

8. மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு அலுவலக அறை கட்டுவதற்கும், மின் இணைப்பைப் பெறுவதற்கும் பணம் வழங்கியது.

9. சிறிஸ்கந்த வித்தியாலயத்திற்கு விளையாட்டு முற்றம் அமைத்துக் கொடுத்தது.

10. சீக்கிரியாம் பள்ளம் அரசினர் கலவன் வித்தியாலயத்திற்கு மேலதிக காணி வாங்கிக் கொடுத்துள்ளோம்.

11. சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் 5ஆம் வகுப்பில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியாக சித்தியடைந்த மாணவன் செல்வன் யூட் நிக்ஷன் ஒறிஸ் ஜேம்ஸ் என்ற மாணவனுக்கு ரூபா 5000 மாணவனின் நிலையான வங்கிக் கணக்கில் இட்டுள்ளோம்.

12. சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு மாணவர்களின் தாகம் போக்க தண்ணீர்த் தொட்டி அமைத்துக் கொடுத்தது

13. சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு ஆங்கில ஆசிரியை நியமித்துப் பணம் வழங்கி வருகின்றோம்.

14. றோமன் கத்தோலிக்க பெண்கள் கல்லூரிக்கு மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கிக் கொடுத்தமை.

15. றோமன் கத்தோலிக்க பெண்கள் கல்லூரியில் 2011ஆம் ஆண்டில் 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் சித்தி அடைந்த செல்வி அமலதாஸ் ஸ்மேரிதனிஸ்ஸா, செல்வன் யூட்கிங் பிறின்ஸ், செல்வி மரியதாஸ் குரூஸ் பிரியதர்சினி ஆகிய மூவருக்கும் தலா 5000 ரூபா வீதம் அவர்களின் நிலையான வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டுள்ளோம்.

16. றோமன் கத்தோலிக்க பெண்கள் கல்லூரிக்கு தரம் 6 மாணவர்களுக்கு கணினி வகுப்புக்கள் நடாத்துவதற்கு பயிற்சியாளரை நியமித்துள்ளோம்.

17. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து பல கல்விமான்களை உருவாக்கிய அமரர் உயர்திரு எட்வேட் நவரத்தினசிங்கம் அதிபர் அவர்களின் நினைவாக 17.04.2010 இல் அவரது திருஉருவச் சிலையை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நிறுவியுள்ளோம்.

18. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் முதல் அதிபர் அமரர் உயர்திரு. எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் 100ஆண்டு நினைவு விழாவை தற்போதைய அதிபர் திருமதி சாரதா கிருஸ்ணதாஸ் தலைமையில் எமது மன்றத்தின் ஆதரவில் கொண்டாடப்பட்டது.

19. சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு கணிதம் கற்பிப்பதற்கு மேலதிக ஆசிரியரை நியமித்து மாதாந்த அடிப்படையில் பணம் வழங்கியது.

20. நெடுந்தீவு வைத்தியசாலைக்கு ஊட்ட சத்து மாத்திரைகள், மருந்துகள் வழங்கியமை.

21. வைத்தியசாலைக்கு நோயாளர் தள்ளுவண்டி (Stretcher) வாங்கிக் கொடுத்தது.

22. குமுதினி படகில் மரணித்த எம்மவர்களின் 20 ஆண்டு நினைவு நிகழ்வுக்குப் பணம் வழங்கியது.

23. கடற்கோளினால் (சுனாமி) ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு C.T.R. வானொலி மூலம் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பணம் வழங்கியது.

24. நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. யேசுராசா அவர்களின் மகளின் மரணச் செலவுக்கு 15,000 ரூபா கொடுத்துள்ளோம்

25. திருமதி. ஜெயந்திரராசா தர்சினி அவர்களின் குழந்தை கௌசிகாவிற்கும் இதய சத்திர சிகிச்சைக்கு 25,000 ரூபா பணம் வழங்கியுள்ளோம்.

26. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாதிரி வினாத்தாள்களை யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்து மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தினோம்.

27. சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு விளையாட்டு முற்றம் அமைத்துக் கொடுத்தது.

28. நெடுந்தீவு மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் உள்ள கிணற்றினுள் குப்பை, கூளங்கள் உட்போகாமலிருப்பதற்கு கம்பி வலையால் கிணற்றை மூடிக் கொடுத்துள்ளோம்.



Buy or Sell your Home
வீடு வாங்க விற்க
பீற்றர் ஐயாத்துரை
Peter Aiyathurai
Cell: 416-817-5052
ஐயாத்துரை
கணபதிப்பிள்ளை
Aiyathurai(AI)
Kanapathipillai
Sales Representative / Mortage Agent
e-mail: pthurai@gmail.com
www.getpeter.com
Sales Representative
Cell: 416-817-0833
Buy or Sell your Home,
for Mortgage needs
வீடு வாங்க விற்க, வீட்டு அடமானக் கடன்
தொடர்பான எல்லாத் தேவைகளுக்கும்
அழையுங்கள்
HomeLife
Superstars
VERICO
MORTGAGE BROKERS NETWORK
HOMELIFE
call now and start packing.....
Real Estate Ltd. - Brokerage
Independently owned & Operated
23, Westmore Drive, Unit - 102 Rexdale, ON, M9V 3Y7
Tel: 416-740-4000
Fax: 416-740-8314

RB

STOP

# Don't Buy Life Insurance Yet!

FOOD

INSURANCE:
Life/Auto/Home/etc.

CARS & UTILITIES

HEALTH

CHILDREN'S EDUCATION

MORTAGE/RENT

**இவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள காப்புறுதி**

உங்களுடையதும், உங்கள் குடும்பத்தினரதும் தரமான வாழ்க்கையை, நிம்மதியாக வாழ்வதற்கு பொருத்தமான காப்புறுதியை துல்லியமாக ஆராய்ந்து, பல நிறுவனங்களிடம் இருந்து தெரிவு செய்து சரியான ஒன்றை மிகக் குறைந்த விலையில் செய்து கொள்ள எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

MDRT
The Premier Association of Financial Professionals

Equitable Life of Canada

RBC Insurance

Desjardins

Canada Life


Manulife Financial

Assumption Life

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

**Consult our Experts**

- INSURANCE
- RESP
- MORTGAGE





**Siva Kandiah**
Financial Architect

**Toronto**
**416.315.8100**
**Montrial**
**438.936.8100**

RB ROYAL BROKERS CORPORATION

80 Nashdene Rd, Unit B 25-26 Toronto ON M1V 5E4
WINNIPEG/ALBERTA (TOLL-FREE): 1.855.722.4722
BUS: 416.298.4722 FAX: 416.298.4664
For full details visit www.royalbrokers.com

# நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர்மன்றம் - கனடா

## தற்பொழுது நடைமுறையில் உள்ள செயற்றிட்டங்கள்

1. நெடுந்தீவில் உள்ள வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறாத ஆதரவற்ற வறிய முதியவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் கடந்த பல வருடங்களாக பணம் வழங்கி வருகின்றோம்.

2. நெடுந்தீவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வறிய கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு கடந்த 10 வருடங்களாக பண உதவி வழங்கி வருகின்றோம். வருடா வருடம் புதிதாக மாணவர்களையும் சேர்த்து இவர்கள் எல்லோருக்கும் பல்கலைக்கழக பட்டப் படிப்பு முடியும் வரை பண உதவி வழங்கி வருகின்றோம்.

3. வெளி மாவட்டங்களில் நடைபெறும் கலை, கலாச்சார விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்றும் மாணவர்களுக்குப் பண உதவி வழங்கி வருகிறோம்.

4. நெடுந்தீவில் நடைபெறும் இல்லப் பொது விளையாட்டுப் போட்டிகளுக்கு வருடா வருடம் சிறிய பணத்தொகை வழங்கி வருகிறோம்.

5. பாடசாலைகளில் சில முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. அதற்கு மேலதிக ஆசிரியர்களை நியமித்து மாதாந்த அடிப்படையில் பணம் வழங்கி வருகிறோம்.

6. பாரிய நோய்களினால் பாதிக்கப்படும் எம்மவர்களுக்கு உதவும் முகமாக "மருத்துவ நிதி" ஒன்றை ஆரம்பித்து உதவி புரிந்து வருகிறோம்.

7. இரண்டு பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளுக்கு கணினிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பித்துள்ளோம். அடுத்த வருடம் தொடக்கம் எல்லாப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

8. சைவப்பிரகாச வித்தியாலயம், மங்கையற்கரசி வித்தியாலயம், சிறிஸ்கந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 4, தரம் 5 வகுப்பு மாணவர்களை ஒன்றிணைத்து, 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விசேட வகுப்புக்களை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளோம்.

9. வருடா வருடம் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு 5000 ரூபா வழங்கி வருகிறோம்.

## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் – கனடா

## நெடுந்தீவு கிளை

## OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA DELFT BRANCH

| | | |
|---|---|---|
| ......எ.அருந்தவசீலன்...... | ....பி.யோண்சன்கெனடி...... | ......அ.புவனேந்திரன்...... |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

''பகிர்'' செய்தி பகிர வாழ்த்துகின்றேன்

நெடுந்தீவு மக்கள் மீதும், மாணவர் மீதும் கொண்ட அக்கறையின் காரணமாக புலம் பெயர்ந்து வாழுகின்ற கனடா வாழ் நெடுந்தீவு உறவுகள் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்- கனடா என்ற நாமத்தோடு அரும்பெரும் பங்காற்றி வருகின்ற மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா மலருக்கு நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் நெடுந்தீவுப் பிரிவுத் தலைவராகிய நான் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

உறவுகள் கனடாவில் வாழ்ந்தாலும் நெடுந்தீவின் வளர்ச்சியில் பங்கு கொள்வதற்காக மக்களிடையே பணத்தைச் சேகரித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், முதியோர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு, பாடசாலைகளின் தேவைகள் கண்டறிந்து அதற்கு உதவுதல், கடும் நோயால் பாதிப்புற்ற நோயாளிகளுக்கு பண உதவி செய்தல், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு வங்கியில் பணம் வைப்பிலிட்டு வழங்குதல், வறிய மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு, பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொடுப்பனவு, போன்ற பெரும் உதவிகளை செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பணிகளுக்கு எமது தீவகத்தின் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பெரும்பங்காற்றி வருவதையிட்டு மனம் மகிழ்கின்றேன். என்றாலும் முக்கியமான பாடசாலை எமது மன்றத்துக்கு தனிப்பட்டரீதியில் எதிர்ப்பை தருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எனினும் நாம் பாடசாலைக்கு செய்வதை செய்து வருகின்றோம். என்றும் எம்பணி தொடரும்.

பல்வேறுப்பட்ட சேவைகளையாற்றி வருகின்ற எமது கனடா வாழ் உறவுகளுக்கும், மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பின் ஆகியோருக்கும், நெடுந்தீவு வாழ் மக்கள் சார்பாகவும், நெடுந்தீவு நிர்வாகத்தினர் சார்பாகவும் நன்றிகள். 'மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற கோட்பாட்டிற்கிணங்க எமது சேவையை திறம்பட நிர்வாகம் வழங்குமென்பதை தெரிவித்து இவ்வாழ்த்துச் செய்தியை இம்மலருக்கு வழங்கி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்- கனடா
நெடுந்தீவு

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய
மாணவர் மன்றம் – கனடா
நெடுந்தீவுக் கிளை.

நெடுந்தீவு பிரதேசசபை
ප්‍රාදේශීය සභාව ඩෙල්ෆ්ට්
DELFT PRADESHIYA SABHA

எமது இல: My No: NP/14/41(7)/letter
உங்கள் இல: Your No:
திகதி: Date: 12-11-2013

தொலைபேசி இலக்கம்: T.P.No: 0213216476 0213202304 0773577604
e.mail: tsecretarydelft@yahoo.com

## "பகிர்" மலருக்கு என் வாழ்த்துக்கள்

நெடுந்தீவு மக்கள் மீதும் மண்ணின் மீதும் புலம் பெயர் நெடுந்தீவு வாழ் உறவுகளின் பரிநாமத்தில் ஆரம்பமாகிய நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா என்ற பெயரோடு ஆற்றிவருகின்ற சேவைகள் அனேகம். நல் மனதோடு பாடசாலை மாணவாகளுக்கான உதவி, முதியோருக்கான உதவி, அபிவிருத்திகளுக்கான உதவி, நோயுற்றோருக்கான உதவியென பல்வேறுபட்ட சேவைகளை செய்து வருகின்ற மன்றத்திற்கு என் சார்பான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு சேவை தொடர வேண்டுமென்றும் "பகிர்"பத்வாவது ஆண்டு நிறைவு மலர் மலர எனது நல்வாழ்த்துக்கள்.

தானியேல் றெக்சியன்

தலைவர்

நெடுந்தீவு பிரதேசசபை

கோட்டக்கல்விப் பணிப்பாளரின்
வாழ்த்துச் செய்தி

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கொழும்பு 10ம் வருட நிறைவின் மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

" உதவிக்கு வந்து செய்தல் [illegible] தொண்டே [illegible] பாரதியாரின் வாக்கிற்கு இணங்க" நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கொழும்பு எமது தீவகத்திற்கு ஆற்றிய, ஆற்றிவரும் பணிகள் அளப்பரியனவாகும். [illegible] நெய்தல் [illegible] அன்புடன் [illegible] ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டவர்கள் சிறியவர்கள் பட்டியல் கரிசனை செலுத்தி அவர்களும் இத்தீவின் சொத்துக்கள் என்ற உணர்வுடன் அவர்கள் வாழ்விலும் விடிவொன்று தோன்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரகாசிக்க செயற்படுமன்றம் செய்து வரும் உதவிகள் ஏராளமான அளப்பில. ~~எமது தீவின் மாணவர்~~

எமது தீவின் மாணவர்கள் திறமையானவர்களாக இருந்தாலும் பொருளாதார இடர்பாடுகளால் தம் கல்வியை சரியான வகையில் தொடர முடியாது இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களை கல்வியில் ஊக்குவிக்கும் வகையிலும் கல்விக்கான சாதனங்களை பெற்றுக் கொடுக்கும் வகையிலும் உதவிகளை மாணவர்களுக்கு வழங்கி வருவதும் சிறப்பானதாகும். கல்வியை மட்டும் அறியாக் கொண்டு அன்புடன் எமது தீவின் பாடசாலைகளுக்கு தேவையான கற்றல் கற்பித்தல் உபகரணங்களையும் ஏனைய உதவிகளையும் செய்து வருவதும் நாம் அறிந்ததே ஆகும்.

எனவே எமது சமூகத்தை கல்வியிலும் ஏனைய சமூக பொருளாதார விடயத்திலும் வளப்படுத்தும் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கொழும்பின் சேவைகள் தொடரவும் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் என் பெருங் காலத்தின் தேவை உணர்ந்து அவர்களின் பணி சிறப்பாகத் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

க. [illegible]
நெடுந்தீவு

## யா / நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்
## J/DELFT SUBRAMANIYA VIDYALAYAM

WARD NO- 14 EAST | SCHOOL NO:- 1004005

21 / 10 2013

கனடா பழைய மாணவர் மன்றத்தினரால் வருடம் தோறும் "பகிர்" வெளிவருவதையிட்டு அக மகிழ்கின்றேன். இம்மன்றமானது நமது பிரதேசத்தின் அனைத்து விடயங்களிலும் கரிசனை காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. எந்த வித வேறுபாடின்றி தனது பணியினைத் தொடர எனது வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.

நன்றி

V. [signature]
*Mrs. V. Thevathasan*
Principal
J/Subramaniya Vidyalayam
Delft

யா/ நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க. வித்தியாலயம்

J/DELFT MAVILITHURAI R.C.T.M. VIDYALAYAM

நெடுந்தீவு DELFT

............201..

வாழ்த்துச்செய்தி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

புலம் பெயர்ந்து வாழுகின்ற எம்தீவகத்தைச் சேர்ந்த அன்பு உள்ளங்களுக்கு எம் பாடசாலைச் சமூகம் சார்ந்த நல்வாழ்த்துக்கள்

தேசபக்தியும், பரந்த மனப்பாங்கும், பொதுநலமும் கொண்டு உயர்ந்த நோக்கோடு வாழிய பயிருக்கு எல்லாம் உறுதுணையாகின்ற தங்களின் சேவையை மறப்பதற்கில்லை. எமது பாடசாலைக்கு செய்த உதவிகளுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு தங்களது சேவை மென்மேலும் தொடர இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

"தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக
கொள்வார் பயன் தெரிவார்"

நன்றி

S. Ahi
Miss.S.Ahilandeswary
Principal
J/Delft Mavilithurai R.C.T.M Vidyalayam
Delft

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

நெடுந்தீவு பாடசாலைகளின் 23.10.2013

பழைய மாணவர் மன்றம் - கனடா.

இம் மன்றம் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை மகிழ்வுடன் கொண்டாடுகின்றது. கனடாவில் வாழும் இவர்கள் இங்கு வாழும் உறவுகளுடன் சங்கமிக்க மறப்பதில்லை. இவ் உறவுகளின் சங்கமம் இங்குள்ள மக்களின் வாழ்விற்கு மெருகு ஊட்டுகின்றது. எம்முடைய மக்கள் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் இம் மன்றம் செயற்படுகின்றது. "அன்பே கடவுள்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில் இம் மண்ணில் பரிவுடன் பணியாற்றியுள்ளனர். இறையன்பிற்கு வடிவம் கொடுத்துள்ளனர். பள்ளிச் சிறார்கள் தொடக்கம் வயோதிபர் வரைத் தேவையில் இருப்போரை இனங் கண்டு தேவைகளை அறிந்து, ஆற்றல், பணம், நேரம் இவற்றை பகிர்ந்து வாழ்கிறார்கள். பகிர்ந்து வாழும் பண்புள்ளம் கொண்ட இம்மன்றம் சார் அங்கத்தினரை அன்புடன் வாழ்த்தி, இறையாசீர் வேண்டி நிற்கிறேன். நன்றி.

சிஸ்டர் ஜெசிந்தராணி
அந்தோனிப்பிள்ளை.

அதிபர்
யா/நெ/றோ.க.ம.கல்லூரி

Greeting/ letter.

I heartful thank to give the opportunity as an English teacher in Sikriyampalam Gov Mixt school in Delft. It's my pleasure to congratulate to your 10th Anniversary celebration and relese of the Mazation. this days is obviously a very special day for you and ~~me~~ us. The ten years of it's service the canada union Marks it's many achievement of having provided opportunity's to build education. I wish to commond the president of delft - branch and other members for them excellent services. I sincerely wish the canadamion all progress to prosper from Development to Development.

Thank you.

K. Rajiv prakash
English teacher
Sikriyampalam
Gov. Mixt. school

யா/நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க வித்தியாலயம்

**J /DELFT SEEKIRIYAM PALLAM G.T.M.VIDYALAYAM**

தலைவர் / செயலாளர்
நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா

பிறந்த நாடு பெற்றோர்களுக்கு ஈடாகும் தமிழரின் மரபுக்கேற்ற விதத்தில் நெடுந்தீவு மண்ணுக்காக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்ற மன்றத்தினருக்கும், கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும் எமது நன்றி கலந்த வாழ்த்துக்கள்

எமது மாணவர்களின் முன்னேற்றம் கருதிய உடனடி உதவிகளுக்கும், மற்றும் எமது வித்தியாலயத்துக்கு தேவையான காரியங்களைச் செய்வதற்கும், இன்னும் பல ஆசிரியர் பணக்கொடுப்பனவுக்கும், வறிய கற்றலில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான நிதியுதவிகளுக்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தாயகத்திலே 'பகிர்' சஞ்சிகையையும் மன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவையும் நடாத்துவதற்காக மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

S. Pathmanathan



# நெடுந்தீவு சுற்றுலா மையம்

**மாகாண பிரதேச சபைகளின் நடவடிக்கை தேவை.**

அழகான ஒரு கடற்கரை. சுற்றுலா மையங்களில் காணப்படும் பல்வேறு வசதிகளும் இல்லாத நிலையிலும் கூட நெடுந்தீவு மணற்றுறைக் கடற்கரை வெளிநாட்டு உல்லாசப்பயணிகளைக் கவர்ந்த ஒரு கடற்கரையாகவே இருந்துள்ளது. வெண்மணல்கள் பரந்து காணப்படும் அந்தக் கடற்கரையில் வெள்ளைக்காரர்கள் உருண்டு புரள்வதையும் கடலில் குளித்து மகிழ்வதையும் காணும்போது எவ்வளவு சிறந்த கடற்கரை இது என்ற மகிழ்ச்சிதோன்றாது இருக்கமுடியாது. அவ்வளவுக்கு சாட்டி, கசூரினா கடற்கரைகளை விடச் சிறந்த கடற்கரை மணற்றுறை கடற்கரை ஆகும்.

நெடுந்தீவு யாழ்குடாநாட்டின் தொல்லியல் பெருமை வாய்ந்த ஒரு தீவு. நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் ஏனைய தீவுகளை விட தொல்பொருள் வரலாறுகள் நிறையவே உண்டு. நெடுந்தீவுக் குதிரைகள், வெடியரசன் கோட்டைகள், போத்துக்கேயர் கோட்டை, ஒல்லாந்தர் கால வாசஸ்தலம், புறாக்கூடு, குதிரை லயங்கள், நாற்பது மனிதனின் காலடி சாராப்பிட்டியில் உள்ள தீப்பாறைக் கிணறுகள் குயின்ரவர் நீண்டு பரந்து பல வருடங்களாக நிமிர்ந்து நிற்கும் ஆலமரம் 350 வருடங்களுக்கு முற்பட்ட பெருக்கு மரம் என நிறைந்து காணப்படும் வரலாற்றுச் சாதனங்கள் தீவு ஒரு சிறந்த இடமாக சுற்றுலாமையமாக விளங்கக் காரணிகளாகின்றன.

யுத்தத்திற்கு முன்னர் இந்த வரலாற்றுச் சான்றுகளைப் பார்த்து அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக் கொள்வதற்காக உல்லாசப்பயணிகள் அங்கு நிறையவே வந்ததுண்டு இந்தச் சான்றுகளைப் பார்த்து மணற்றுறைக் கடற்கரையில் அமர்ந்து குளித்து துறை முகத்தில் உள்ள வாடி வீட்டில் மணியண்ணர் வழங்கும் கூழ் மற்றும் உணவு வகைகளைச் சுவைத்துச் செல்வதில் மகிழ்ச்சியுறும் உல்லாசப் பயணிகளைக் குறிப்பாக மேற்கு நாடுகளில் இருந்து வருபவர்களை நாங்கள் நிறையவே கண்டிருக்கின்றோம். Hot ஆக இருக்கின்றதே Cool என்கிறீர்களே என்று கூழ் உணவைச் சுவைத்தவர்கள் பெயர் விளக்கம் கேட்டதும் உண்டு. ஒரேயொரு விடுதியாக அன்று துறைமுகத்தில் அமைந்திருந்த வாடி வீட்டில் தங்கி நெடுந்தீவைக்கண்டு மகிழ்ந்தவர்கள் ஏராளம்.

இன்று நெடுந்தீவுக்கு வருகை தரும் வெளிநாட்டு மக்களின் தொகை மிகவும் பெருமளவில் அருகியுள்ளது. யுத்தத்தின் பின்னர் சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது. மீண்டும் நெடுந்தீவுக்கான உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்க புதிய வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இருந்த ஒரே ஒரு வாடி வீடும் காணாமல் போயுள்ளது. வெளி இடங்களில் இருந்து வருபவர்கள் தங்கிச் செல்லவும் தமது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும் வசதிகளற்றுப்போயுள்ளது. இது மாற்றப்படவேண்டும். சிறந்த விடுதிகளை நவீன வசதிகளுடன்

கூடியதாக அமைக்கவும் குதிரைகளை ஒரே இடத்தில் கூடுதலாகப் பார்வையிடக் கூடியதாகவும் உல்லாசப்பயணிகள் விரும்பும் பட்சத்தில் குதிரைச் சவாரிகளைச் செய்யக்கூடியதாகவும் நடவடிக்கைகள் தேவை.

சிதைந்து கொண்டிருக்கும் கோட்டைகள் அழிந்து கொண்டிருக்கும் சின்னதான தொல்லியல் சான்றுகள் பெருக்குமரம் ஆல் என்பவற்றையும் இராணி கோபுரமும் பாதுகாக்கப்பட வேண்டும். மணற்துறைக் கடற்கரை நவீன வசதிகள் கொண்ட விடுதிகளாகவும் சிறுவர்களுக்கான விளையாட்டு அரங்குகளை உள்ளடக்கியதாகவும் ஆங்காங்கே நிழற்குடைகளைக் கொண்டதாகவும் உருவாக்கப்பட வேண்டும். உல்லாசப் பயணிகளுக்கான போக்குவரத்துக்கள் கஸ்டமின்றியும் விரைவு கொண்டதாகவும் அமைவதுடன் நீர் நிலப்பகுதிகளில் பறவைகளுக்கான சரணாலயங்கள் சிறு படகுச் சவாரிகள் என்பவையும் உருவாக்கப்பட வேண்டும். நெடுந்தீவின் தொன்மைச் சிறப்புக்களைச் சித்தரிக்கும் காட்சிப்படுத்தல்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் விளம்பரங்களாக அமைவதுடன் சுற்றுலாத்துறை தனது விளம்பரங்களில் சிறப்பு முக்கியத்துவம் கொடுப்பதுடன் சீரான போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளையும் கவனித்தல் அவசியம்.

மாகாண பிரதேச சபைகள் இது விடயத்தில் கூடுதல் கவனம் எடுப்பதுடன் விடுதிகள் அமைவதைப் பொறுத்த வரை அது உள்ளூர் மக்களுக்கானதும் மாகாண பிரதேச சபைகளுக்கானதுமாக இருத்தலை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும். காலகெதியில் நில அபகரிப்புகளும் தமிழ் மக்களது பாரம்பரியங்கள் சிதைவுறாது பாதுகாப்பது நமது முக்கிய கடமை என்பதினால் விடுதிகள் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல் அவசியம்.

நெடுந்தீவு ஒரு சிறந்த சுற்றுலாத்துறை மையம் என்பதால் உள்ளூரின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் ( பனம் பொருள்கள்) இன் அதிகரிப்பிலும் கவனம் தேவை. கடந்த காலங்களில் பனம் பொருள்கள் மிகக் கூடுதலான அளவில் தயாரிக்கப்பட்டதுடன் வெளியிடங்களுக்கும் அவை அனுப்பிவைக்கப்பட்டது. வெளிநாட்டவர்கள் பனை உற்பத்திப் பொருள்களில் நாட்டம் கொண்டுள்ளவர்கள் என்பதால் பனை உற்பத்திப்பொருள்களை மேம்படுத் துதலும் அவசியம். மேலாக சுற்றுலாத்துறை சார்ந்த அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய ஆலோசனைகள் நடவடிக்கைகள் குறித்து தகுதி வாய்ந்தவர்களின் கருத்துக்களைப் பெறவும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அக்கறை தேவை.

மாகாண பிரதேச சபைகள் இது விடயத்தில் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் உள்ளூர் மக்களின் வருமானத்தையும் கவனத்தில் கொண்டு செயற்படும் பட்சத்தில் சுற்றுலாத்துறையூடாக நெடுந்தீவு வளர்ச்சியுறும் என்பது மறுப்பதற்கில்லை.

**நெடுந்தீவு லக்ஸ்மன்**



# தமிழில் நான் கண்ட பெரியானே....

தமிழில் நான் கண்ட பெரியானே
உன் சேவை மலரைப் போல அல்ல
ஒரு நாளில் பூத்து உதிர்ந்து விடுவதற்கு
அது வானில் இருக்கும் நட்சத்திரத்தைப் போல்
வானம் இருக்கும் வரை சேவையும் இருக்கும்

எல்லையில்லா உன் சேவை
காலையில் உதித்து மாலையில்
மறையும் கதிரவனைப் போன்றதல்ல
அது எல்லையில்லா கடல் போன்றது
தொடர்ந்து இருக்கும் சேவை

உன் சேவையினால் மாணவர்களாகிய நாம்
தடையின்றி கல்வியைத் தொடரவும்
மற்றோர் வாழ்த்தவும் கூட செய்கின்றது
ஓங்குக உன் புகழ்

**Jeyakanthan Reminton**
University of Jaffna
Faculty of Agriculture
Batch - 2010



Vist us.....
There are hundreds of
grocery items on our shelves..
ஞானாஸ்
மார்க்கட்
GNANAHS MARKET
Sri Lankan East - west indian Grocery
44 Dean Street, Bramton, ON, L6W 1M




POORANI
VILAAS
Take-out Restaurant & Catering
www.pooranivilaas.ca
Delicious, Quality and Healthy
சுவைமிக்க தழிழீழ, தென்னிந்திய, மற்றும் சீன உணவு வகைகள்
சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க,
சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்!!!
416.335.7775 647.822.4972
6055 Steeles Ave. E, Unit 104 (Markham & Steeles)
Toronto, ON M1X 0A7



# MP Accounting and Finance Services Inc.

42 வருடங்களுக்கு மேலான கணக்கியல் வருமான வரி அனுபவம்

27 Years Canadian ecpreience on Financial Management - FormerGovt.Accou Sri Lanka

## சின்னத்துரை மகேந்திரநாதன்
## Sinnadurai Mahendranathan

B.com(Hons), D.P.F.M., C.A. Licentiate (Sri Lanka)
CGA - L4 )Canada), ICMA - P3 (England)

**For all your Accounting Needs :**
Financial Dtatements (Corporation, Partnership.
Proprietorship, Non - Profit organization & Charity)
Cash Flow Statements
Business Plan
Computerrized Accounting Etc.

**Canadian Tax Services:**
Personal Taxs
Corporate Taxation & Returns (Federal & Provincial)
HST Returns

**Accounting Software Installation,**
Training & Consultation

**Education Saving Plans**

**Financial Planning**

**Finance Arrangement**


**Insurance**
Life, Critical. Disability, Health & Dental Travel,
Long - term care, Mortgage and Group Insurances.

**Ivestments**
RRSP, RESP, TFSA, Lock - in - Funds, Annuity,
RDSP, GMWB, Pension Benifit,
Non - registered and Seg. Funds.

1750, Birmley Road, Suite 215, Scarborough, Ontario M1P 4x7
Phone : 416 - 438 - 9799 Fax : 416 - 438 - 5773 Cell L 416 - 818 - 8990
Website : www.mpaccounting.net Email : mahen@mpaccounting.net

# EVEREST TRAVELS & TOURS

*The Afex of Travel*



உங்கள் விமான பயண
சீட்டுக்களை மிக
குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ள
இன்றே அழையுங்கள்.

**Call S.Ramanan**

**Tel : 416.321.2311** Flyeverestravels@gmail.com
2761 Markham Rd, Unit C21,
Toronto, ON M1X OA

NEW KAVERI Supermarket

One Stop Shop For Your Daily Needs

Operated by Rama Grocery Inc.

Indian & Srilankan Grocery Store, Fast and Friendly Efficient Service

- Rabeena Handpound Parboiled Rice
- Diabetic Rice
- Kasmira Basmati Rice (10Lb)
- Ravi Sonmasoori
- Niru Brand Products
- Masoor Dal (2Lb, 4Lb)
- Idhyam sesame Oil (1L)
- Katta Sambol
- Priya Ready to Eat Packets
- Priya Pickles, Curry paste
- Ruchi Pickles (Buy 1 Get 1 Free)
- Seeni Sambol
- MTR Brand All Products
- Baba's Curry Qurma Masala
- Baba Brand Products
- Mottakaruppan Rice
- Jay Brand Product
- Eastern Brand All Products

உங்களுக்குத் தேவையான அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப்பொருட்கள் ஆட்டிறைச்சி, கடலுணவு, மளிகைப் பொருட்கள் யாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள மற்றும் பூஜைக்குரிய பொருட்கள் தொலைபேசி அட்டைகள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.



29, Dundas Street,
E.Mississauga,
ON L5A 1V9
Tel: 905-277-5861

We carry Sri Lankan, Indian and Canadian, Fish, Meat, Vegetables, Fruits and Much More...

JETSPEED TRAVEL



We Specialized in:
Air Travel, Package Tours,
Cruise, Rail
Car Rental and Travel Insurance

All your Travel Arrangements will be done by our travel experts with 20 years experience

20 வருட கனடிய அனுபவமுள்ளவர்களால் உங்களுக்குத் தேவையான பிரயாண ஒழுங்குகளை மிக இலகுவாக செய்து கொள்ள அழையுங்கள்.

Tel: 416-609-0544
Fax: 416-332-0082
Toll Free: 1-877-33SPEED

EMIRATES - KUWAIT AIRWAYS - LUFTTHANSA - ETIHAD - KLM - CATHY PACIFIC
QALITALIA - ATAR AIRWAYS - JET AIRWAYS - AIR SAHARA - GULF AIR
SINGAPORE AIR LINES - BRITISH AIRWAYS - AIR CANADA - SRILANKAN AIR LINES

5800 Sheppard Ave.E.Unit 12, Scarborough, ON.M1B5J7
www.jetspeedtravels.com, inq@jetspeedtravels.com
After Hours: 416 - 803 - 0720 (Emergency Only)

# LAW OFFICE

## T.Jegatheesan

**Barrister, Solicitor and Notary Public (Ont.)**

**Real Esate**

Purchase, Sale, Mortgage

காணி, நிலம், வீடு வாங்கல், விற்றல், அடமானம் வைத்தல்

**Family Law**

Divorse, Seperation

குடும்பம் தொடர்பான வழக்குகள், விவாகரத்து, பிரிவு

**Business**

Purchase, Sale, Incorporation

வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை

**Power of Attroney**

Affidavits, Statutory Declaration, Last Will

தத்துவப்பத்திரம், சத்தியக்கடதாசி, உயில்



உங்கள் சட்டப்பிரச்சனைகள் எதுவாகிலும் தமிழிலும்,
ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும்,
சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

## தி.ஜெகதீசன்

**Off: 416 266 6154**

**Fax: 416 266 4677**

**2620 Eglinton Ave. E. #201, Scarborough, ON. M1K 2S3**



பா. விமலேகா
4ம் வட்டாரம்,
நெடுந்தீவு.
2013.10.23.

தலைவர், செயலாளர்,
நெடு. பாடசாலைகளின் பழைய
— மாணவர் மன்றம்,
கனடா.

ஐயா!

தொடர்ந்தும் உதவு தொகை வழங்க
ஆவன செய்யுமாறு கோருதல்

செல்வி. பாலசுப்பிரமணியம் விமலேகா ஆகிய எனக்கு, நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம், கனடா, மாதாந்தம் உதவித் தொகையை வழங்கி எனது கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வந்தது. நான் க.பொ.த. சா/தரம் வரை யா/நெ. மகா. வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது உயர்தரக் கல்வியை வவுனியா / வைரவப் பிரகாச மகளிர் கல்லூரியில் தொடர்கிறேன். எனது கல்வியினை தொடர்வதற்கு சாதகமாக இருப்பதால், எனக்கு வழங்கி வந்த மாதாந்த உதவித் தொகையை தொடர்ந்தும் வழங்கி எனது கல்வி வளர்ச்சியை மேம்படுத்த உதவுமாறு மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
நன்றி.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
மாணவி,
பா. விமலேகா.

உ சிவமயம்

கே. நிருசன்
தரம்_10
யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச
வித்தியாலயம்
நெடுந்தீவு.

தலைவர்/ செயலாளர்
நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்_ கனடா
நெடுந்தீவு கிளை.

நான் நீண்ட காலமாக தங்கள் மன்றம் ஊடாக உதவிப் பணத்தைப் பெற்று வருகின்றேன் இதன் மூலம் நான் கல்வி கற்பதற்கு தேவையான உபகரணங்கள் பயிற்சி புத்தகங்கள் என்பவற்றை பெற்று கொள்ள இப்பணம் எனக்கு பேருதவியாக இருக்கின்றது. தற்போது தரம்_பத்தில் கல்வி கற்று வருகின்றேன் இவ் உதவியை வழங்கிய மன்றத்தினருக்கு எந்நாளும் நன்றி கூறக் கடமை பட்டுள்ளேன்.

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள மாணவன்
கே. நிருசன்.



2013 இல் றோ.க.பெ. கல்லூரியைச் சேர்ந்த
வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவிக்கு பணம் வழங்கிய போது



2013 இல் செயற்குழு உறுப்பினர் றோ.க.பெ. கல்லூரி அதிபர், வறுமைக் கோட்டின்
கீழ் உதவி பெறும் மாணவர்களுடன்

அமரர் உயர்திரு. எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் நூற்றாண்டை நினைவு கூரும் விழாவில் பரிசில் வழங்கல்



சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் செல்வி. இ. திவ்வியாவுக்கு திரு. மயில்வாகனம் விஜயநாதன் (கனடா) அன்பளிப்பு செய்த துவிச்சக்கர வண்டியை திரு. க. பொன்னுத்துரை (மன்றச் செயலாளர்) கையளித்த போது

1ம் வட்டாரம்
நெடுந்தீவு

தலைவர் | செயலாளர்
நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா

நான் இப்போது தரம் எட்டில் படித்துக் கொண்டிருக்கிறேன் முன்னை விட இன்னும் கூடப் படிக்கிறேன் அதற்கு தங்களின் உதவி மிக மிக உதவியாக இருக்கிறது. வீட்டில் நான் இரண்டாவது பிள்ளையாக இருந்தேன் இப்போது மூத்த பிள்ளையாக இருக்கிறேன். க.பொ.த உ/தரம் படித்துக் கொண்டிருந்த அண்ணை விபத்தொன்றில் இறந்துவிட்டார். அதனால் எனது இரண்டு சகோதரர்களுக்கு நான் வழிகாட்டியாக இருக்க வேண்டி இருக்கிறது தயவு செய்து தொடர்ந்து எனக்கு உதவி செய்யுங்கள்

உங்கள் உதவியை நான் என்றும் நன்றியுடன் நினைவு வைத்துக் கொள்வேன்.

அன்புடன்

தி. லதீபன்

நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
நெடுந்தீவுக்கிளை
கனடா

1ம் வட்டாரம்
மேற்கு
நெடுந்தீவு
06.11.2013

கணேசமூர்த்தி கார்த்திகா ஆகிய நான் தரம்=8 இல் கல்வி கற்கின்றேன் தங்களால் தரப்படும் பணத்தினைக் கொண்டு பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள், கொப்பி; பேனாக்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இவ்வாறாக எனது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
க. கார்த்திகா

[illegible]
பழைய மாணவர் மன்றம்
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
06. 11. 2013

[illegible] ஆசிரியரால்
தரம் - 13 A/L கல்வி கற்கின்றேன் [illegible]
[illegible] எனது பாடசாலை உ[illegible]
பெற்றுக் [illegible] மேலும் நான்
முயன்று [illegible] புரிந்து [illegible]
-யும் [illegible] எனது கல்வித்
தேவையைப் பூர்த்தி செய்கின்ற உங்களுக்கு எனது
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்
கிறேன்

இங்ஙனம்
[illegible]

நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
நெடுந்தீவுக் கிளை
கனடா

ச. விஜயா,
9ம் வட்டாரம்,
நெடுந்தீவு,
மேற்கு,
2013.11.07.

மேற்படி முகவரியில் வசிக்கும் விஜயா சடாசிவம் ஆகிய நான் தரம் 11 இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன். தங்களால் தரப்படும் பணத்தினைக் கொண்டு கல்விக்கான உபகரணங்களை பெற்றுக் கொள்கின்றேன். எனது முயற்சிக்கு நீங்கள் தரும் பணம் மிகவும் உதவு -கின்றது. உங்களது பணி மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள மாணவி
ச. விஜயா

[illegible]
பழைய மாணவர் மன்றம்
நெடுந்தீவுக் கிளை
கனடா.




த. ஜெயரங்கன்
1ம் வட்டாரம்
நெடுந்தீவு,
மேற்கு.
2013.11.07.

மேற்படி புலமைப்பரிசில் விளக்கம்

தருமலிங்கம் ஜெயரங்கன் ஆகிய நான் தரம் 11 O/L இல் சித்தி பெற்று தரம் 12/A/L இல் கல்வி கற்று தொடருகின்றேன். தங்களால் தரப்படும் பணத்தினைக் கொண்டு கல்விக் தேவைக்கான உபகரணங்களை பெற்றுக் கொள்கின்றேன். எனது முயற்சிக்கு நீங்கள் தரும் பணம் மிகவும் உதவுகின்றது. இப்பணியானது மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
உண்மையுள்ளமாணவன்
த. ஜெயரங்கன்.




கி. பவசன்

யா/நெடுந்தீவு. சுப்பிரமணிய வித்தியாலயம்

எனக்கு கனடா பழைய மாணவர் மன்றத்தி-னால் ஊக்குவிப்புப் பணமாக 300/= வைப் பெற்றுக் கொண்டேன்.

எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
கி. பவசன்.






# INSURANCE SERVICE

அனைத்து வகையான இன்சூரன்ஸ் தேவைகளுக்கும்
அனுகுங்கள் உங்கள் ஆயுட் காப்பீட்டு நண்பனை...

## Life Insurance

- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Mortgage Insurance
- RRSP - Start from $25
- RESP - Start from $25
- Travel Insurance
- Investment Loan
- Home Equity Line of Credit

**5 Top Secrets to save money on Life Insurance**

**Thana Manickavasagar**
Broker

REFERRAL WELCOME

Cell : **416-728-5772**
Off : **416-519-3896**
Fax : **647-547-8147**





**E-mail : thana7@gmail.com Web : www.thana.ca**

*80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4*

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

நிருமா புவானிஸ் தேவதாஸ்
யா. நெ. றோ. க மகளிர்
கல்லூரி
24. 10. 2013

24 . 10 . 2013

நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
கனடா,

<u>உதவி வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தல்</u>

யா. நெடு றோ. க மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவியாகிய எனக்கு தரம் – 10 தொடக்கம் 11 வரைக்கும் கனடாவால் வழங்கப்படும் பண உதவியை பெற்று வருகின்றேன். நான் கடந்த வன்னிப் போரில் எனது பெற்றோரை இழந்து விட்டேன். இந்த வறுமை கோட்டின் கீழ் வாழும் எனக்கு இந்த உதவியானது பெரும் துணையாக உள்ளது. நான் இந்த வருடம் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றவுள்ளேன். எனது கல்வியை முன்னெடுத்துச் செல்ல உங்களது உதவி ஆதாரமாக உள்ளது நான் இந்தப் பரீட்சையில் நல்ல பெறு பேறுகளை பெறுவேன் என்றும் நான் உங்களது உதவியின் மூலம் எனது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடி கொடுப்பேன் என நம்புகின்றேன் எனவே இவ் உதவியை வழங்கி வரும் உங்களுக்கு எனது உளம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

நன்றி

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு                                DELFT

....24..10..2013

அன்ரனிஜோஸ் மரியஸ்டெலா
யா. நெடுந்தீவு. றோ. க. மகளிர் கல்லூரி.
24.10.2013

தலைவர்,
நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா

உதவி வழங்கியமைக்கான நன்றி
தெரிவித்தல்

யா. நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மரியஸ்டெலா அன்ரனிஜோஸ் ஆகிய நான் தங்களது நிறுவனத்தினால் கடந்த ஒன்று வருட காலமாக உதவி பெற்று வருகின்றேன். இதற்கு முன்னர் எனது சகோதரி கிறிஸ்ரினா அன்ரனிஜோஸ் என்பவர் தங்களது உதவியைப் பெற்று க.பொ.த சாதாரண பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்த தற்பொழுது யாழ் திருமறை கன்னியர் மடத்தில் தங்கி உயர் கல்வியை கற்று வருகின்றார். இதேப் போன்று இந்த உதவியை நான் பெற்று 2012ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 1A, 2B, 3C, 2S எனும் பெறுபேற்றினைப் பெற்று தற்பொழுது A/L (2015)ல் கலைப் பிரிவில் கல்வி கற்று வருகின்றேன். எனவே எனது கல்வி முன்னேற்றத்திற்கு உதவி புரிந்தமைக்கு நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள
மாணவி
அ. மரியஸ்டெலா



2013 இல் சுப்பிரமணிய வித்தியாலயம் முன்பாக அதிபரும்,
செயற்குமு உறுப்பினர் திருமதி கலாதேவி விசாகன் அவர்களும்



2013 இல் றோ.க.பெ.கல்லூரியைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள
மாணவிக்கு பணம் வழங்கியபோது



2013 இல் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கணினி வகுப்பு
ஆரம்பிக்கப்பட்ட போது



செயற்குழு உறுப்பினர்கள் அதிபர், ஆசிரியர், மாணவர்களுடன்
சைவப்பிரகாச வித்தியாசாலையில் - 2013

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

........24..10....2013.

யோன்ப குமார் நிவேதா
யா/நெடுந்தீவு றோ. க. மகளிர். கல்லூரி
நெடுந்தீவு
24. 10. 2013

தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின்,
பழைய மாணவர் மன்றம்,
கனடா.

<u>உதவி வழங்கியமை தொடர்பாக</u>
<u>நன்றி தெரிவித்தல்</u>

யாழ்/நெடுந்தீவு. றோ.க.மகளிர் கல்லூரியில் தரம் 13 இல் [2014] கல்வி பயிலும் யோன்பகுமார் நிவேதா ஆகிய நான் கடந்த 02 வருடங்களாக தங்கள் ஒன்றியத்தினால் வழங்கப்படும் கல்விக்கான உதவித் தொகையினைப் பெற்று வருகின்றேன். இவ் உதவியானது, க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த உயர் கல்வியைத் தொடர்வதற்கும் எனது குடும்ப வறுமை சூழ்நிலையிலும் கூட விளையாட்டுத் துறையில் வலயமட்டம் மாவட்ட மட்டம் சென்று எனது திறமை வெளிக்கொணர்ந்து பல வெற்றிகளைப் பெறுவதற்கு உங்கள் உதவியானது உறுதுணையாக அமைந்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் எமக்கு அன்புடனான் உதவி செய்யும் உங்கள் ஒன்றியத்திற்கு வாழ்த்துக்களையும், நன்றியையும் கூறி நிற்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
உண்மையுள்ள
மாணவி
யே. நிவேதா

**J/DELFT R.C. LADIES COLLEGE**
**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

மேரி அஸ்வினி அந்தோனி
யா நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரி

24.10.2003

தலைவர்
நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழையமாணவர் மன்றம் - கனடா

நன்றி நவிலல்.

எனக்கு 2012ம் ஆண்டிலிருந்து உதவிப்பணம் வழங்கியதற்கு உங்களுக்கு நன்றி. நான் புலமைப் பரீட்சையில் 146 புள்ளிகளை பெற்றேன். நான் சித்தியடைவேன் என்று எதிர்பார்த்திருந்தேன் ஆனால் சித்தியடையவில்லை உங்களது உதவிப்பணம் எனக்கு கல்வி கற்பதற்கு உதவியாக இருந்தது. நான் உங்களது உதவியை ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் உங்களிற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நான சித்தியடையவில்லை என்று மனம்சோர்ந்து போகவில்லை. இன்னும் தொடர்ந்து கல்வி கற்பதற்கு முனைகிறேன். உங்களது உதவி என்றும் கல்வி கற்பதற்கு உதவும் என்று நம்புகிறேன். பாடசாலையில் ஆரம்பப்பிரிவு உடற்கல்வி நடைபெற்றது. அதற்கு நான் தலைவியாக இருந்து சாதனை புரிந்தேன். உடற்கல்விநிகழ்வு சிறப்பான நிகழ்வாக இருந்தபடியினால் பிரதேச சபை தழுக விளையாட்டுப்போட்டியில் இடைவேளை நிகழ்வாக எமது உடற்கல்வியை தெரிவு செய்தார்கள். அதிலும் சாதனை புரிந்தேன். நான் ஒரு எழுத்தாளராக வர விரும்புகிறேன்

நன்றி

நன்றி
இங்ஙனம்
உண்மையுள்ள மாணவி
அ. மேரி அஸ்வினி


EYES IN FOCUS
OPTICAL
50% OFF
on ALL DESIGNER FRAMS
FREE EYE EXAM WITH
Complet PAIR OF GLASSES
PURCHASE
SERVICES
Eye exam
Designer Eyeglasses & Sunglasses
Contact Lens Filtting
Low Vision-Aid Services
WE ACCEPT MOST INSURANCE PLANS
905 846 0084
Unit 3 - 10061 McLaughlin Rd,
Brampton, ON
L7A 2X5
Foot Care
&
Medical Supplies
Office Hours:
Mon-Thur. 11.00 to 7.00
Fri. 11.00 t0 3.00
Sat. 11.00 to 4.00
Tel: (905) 791.3668
Fax: (905) 791.2822
E-mail-footcarems@gmail.com
490 Chrysler Dr.Unit 48
Brampton, ON, L6S 0C1


AUTO SERVICE
Auto Service
OPEN
7 DAYS
குயிக் பிக்ஸ் ஓட்டோ சேர்விஸ்
Engine Overhul
Computer Diagnostic
Rediator
Transmissions
Electrical
Windshields
Tune - Up
Brakes
Jugin
905-866-6989|905-866-6668
Cell: 647-898-9703 Fax: 905-866-6677
ANNAPOORNA
Take - Out & Catering
அன்னபூர்ணா
உணவகம்
Srilankan
&
South Indian
Restaurant
Tel : 905.812.7600
5390 Terry Fox Way, Unit 3, Mississauga, ON L5V OA5

# J/DELFT R.C. LADIES COLLEGE

## DELFT, SRILANKA

**Principal**
**Rev .Sr. Jasintharani Anthonypillai**

**Fax:**
**Phone:**
**2013/..10../..24.**

FOUNDED 1943

தோமஸ் அல்வா எடிசன் கிஸ்மியா,

யா நெடுந்தீவு றோ. க மகளிர் கல்லூரி.

21.10.2013.

தலைவர்,

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா.

### உதவி வழங்கியதையிட்டு நன்றி தெரிவித்தல்

மேற்படி தோமஸ் அல்வா எடிசன் கிஸ்மியா ஆகிய நான் தற்போது தரம் 06 ல் கல்வி கற்று வருகிறேன். கடந்த இரு வருடங்களுக்கு மேலாக நான் தங்களது ஒன்றியத்தால் வழங்கப்படும் உதவியைப் பெற்று வருகின்றேன். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எனக்கு இவ் உதவியானது மிகவும் பயனுள்ள முறையில் அமைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்கால இலட்சியத்தை தீர்மானிக்கும் க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சையை சிறப்பாக எதிர் கொள்வதற்கு தங்களது உதவி உறுதுணையாக இருக்கின்றது. எனவே எனக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு தொகைக்காக தங்களுக்கு எனது நன்றியை தெரிவிப்பதோடு தொடர்ந்தும் இவ்வுதவியை வழங்குமாறு மிக பணிவன்புடன் கேட்டு நிற்பதுடன், தங்களின் சேவை என்றும் நிலைத்திட இறைவன் அருள் வேண்டுகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்

உண்மையுள்ள மாணவி

தோ. கிஸ்மியா........

# J/DELFT R.C. LADIES COLLEGE

## DELFT, SRILANKA

**Principal**
**Rev .Sr. Jasintharani Anthonypillai**

**Fax:**
**Phone:**

**201.3/..10.../.24.**

FOUNDED 1943

தவநாயகம் மரியதுசியா,

யா நெடுந்தீவு றோ. க மகளிர் கல்லூரி.

21.10.2013.

தலைவர்,

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா,

### உதவி வழங்கியதையிட்டு நன்றி தெரிவித்தல்

மேற்படி தவநாயகம் மரியதுசியா ஆகிய நான் தற்போது தரம் 09 ல் கல்வி கற்று வருகிறேன். தரம் 09 பரீட்சையை எதிர் கொள்ளவுள்ளேன். கடந்த ஒரு வருடமாக நான் தங்களது ஒன்றியத்தால் வழங்கப்படும் உதவியைப் பெற்று வருகின்றேன். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எனக்கு இவ் உதவியானது மிகவும் பயனுள்ள முறையில் அமைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்கால இலட்சியத்தை தீர்மானிக்கும் க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சையை சிறப்பாக எதிர் கொள்வதற்கு தங்களது உதவி உறுதுணையாக இருக்கின்றது. எனவே எனக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு தொகைக்காக தங்களுக்கு எனது நன்றியை தெரிவிப்பதோடு தொடர்ந்தும் இவ்வுதவியை வழங்குமாறு மிக பணிவன்புடன் கேட்டு நிற்பதுடன், தங்களின் சேவை என்றும் நிலைத்திட இறைவன் அருள் வேண்டுகின்றேன்.

நன்றி

இங்ஙனம்

உண்மையுள்ள மாணவி

த.மரியதுசிதா.....

# J/DELFT R.C. LADIES COLLEGE
## யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி

நெடுந்தீவு DELFT

........................200....

விஜயராஜன் தர்மரோஜினி
யா/நெ.றோ.க.மகளிர் கல்லூரி
24.10.2013

நெடுந்தீவு பாடசாலையின் பழைய
மாணவர் மன்றம் - கனடா

<u>உதவி வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தல்.</u>

யா/நெ.றோ.க.மகளிர் கல்லூரியில் தரம் 13(2014) கல்விபயிலும் வி.தர்மரோஜினி ஆகிய நான் உங்களுக்கு அறியத்தருவது எனது சகோதரி வி.நிரோஜினி கடந்த 03 வருடங்களாக தங்களின் உதவியை பெற்றார். அவர் கடந்த வருடம் க.பொ.த.உயர்தரத்தில் தோற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து நான் 02 வருட காலமாக உதவி பெற்றுவருகின்றேன். நான் 2011ம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சையில் எமது பாடசாலையில் இரண்டாவது பெறுபேற்றினை (2A, 4B, 2C, S) பெற்று உயர்தரத்தில் கல்வி கற்கிறேன். நான் விளையாட்டுத் துறைகளில் திடவிளையாட்டுக்களான Net boll, bolley boll ஆகியவற்றுடன் தனிவிளையாட்டுக்களிலும் வலயமட்டத்தில் 1ம் இடத்தினை பெற்று மாவட்ட மட்டத்திலும் அதைத்தொடர்ந்து 2013ம் ஆண்டின் மாகாணமட்டப் போட்டியிலும் தனிவிளையாட்டுக்காக கலந்து கொண்டேன். அத்தோடு தமிழ்த்தின, ஆங்கிலதின போட்டிகளையும் கலந்து வெற்றி பெற்றுள்ளேன்.
பாடசாலை இசைக்குழுவிலும் அங்கத்தவராகவும் உள்ளேன். எனது குடும்பத்திலே எனக்கு 04 சகோதரர்கள் நாங்கள் எமது சிறுவயதிலே எமது தந்தையை இழந்துள்ளோம். எமது குடும்பம் மிகவும் வறுமையான சூழ்நிலையிலே எமது பிரதேசத்திலிருந்து போட்டிக்காக வெளிப்பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையால் தங்கள் உதவிப்பணத் தொகையானது பெரும் பயனுள்ள முறையில் அமைந்ததையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள மாணவி
வி.தர்மரோஜினி.

இயக்குனர் / செயலாளர்

நெடுந்தீவு றோ.க. மகளிர்
புனித மரியாள் மகளிர் - கல்லூரி
நெடுந்தீவு

க. லேனா ஜெயமலர்
தரம் - 10
யா / நெடுந்தீவு மகாவித்தியாலயம்
07.11.2013

நான் நீண்ட காலமாக இங்கள் சேர்ந்து உங்களது உதவிப் பணத்தைப் பெற்று வருகின்றேன் இதன் மூலம் எனது கல்விக்கான பாடப் புத்தகங்கள் தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொண்டு வந்து உதவியாக இருந்தது இப்போது தரம் -10 இல் கல்வி பயின்று வருகிறேன் இந்த வகையில் நீங்கள் செய்த பேருதவியானது எனது கல்விக்கு மிகவும் பயனுள்ளது ஆகவே இவ் உதவிக்காக உங்களுக்கு எனது நன்றியை தெரிவிக்கிறேன்

நன்றி

இப்படிக்கு

க. லேனா ஜெயமலர்



அமரர் உயர்திரு. எட்வேட் நவரத்தினசிங்கம்
அவர்களுக்கு மகா வித்தியாலயத்தில் 06.02.2008
அன்று சிலை அமைப்பதற்கு அடிக்கல்
நாட்டிய போது



2013 இல் மகாவித்தியாலயத்தில் வறுமைக்
கோட்டின் கீழ் உதவி பெறும் மாணவர்களுடன்
அதிபரும், செயலாளரும்,
அவரது துணைவியாரும்



2013 இல் மன்றச் செயலாளர் நெடுந்தீவுக்குச் சென்றபோது



கு. நிர்மல்
தரம் - 11
யா/ தெ. மகா. வி.

தலைவர் / செயலாளர்
தெல்லிப்பழை பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா
தெல்லிப்பழை கிளை

நான் நீண்ட காலமாக தங்கள்
மன்றத்தினூடாக உதவிப்பணத்தை பெற்று வருகிறேன்.
இவை அனைத்தும் எனது கல்விக்கான பயிற்சிப்புத்தகங்கள், இணைய
உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக அமைந்தது.
தற்போது தரம்-11 இல் கல்வி கற்கிறேன். இதுவரை
-யில் தங்கள் தரும் உதவிப்பணமானது எனது கல்விக்கு
மிகமுக்கியமான தேவைகளுக்கு பெரிதும் துணைபுரிந்தது.
அதனை இடைவிடாது தந்துதவிய உங்களுக்கு எனது
நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
கு. நிர்மல்

# J/DELFT R.C. LADIES COLLEGE
## யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி

நெடுந்தீவு — DELFT

தவராசா நிஷா
யா/நெடு. றோ.க. மகளிர் கல்லூரி
24.10.2013

........24. 10. ....2013.

தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின்,
பழைய மாணவர் மன்றம்,
கனடா.

<u>உதவி வழங்கியமை தொடர்பாக நன்றி தெரிவித்தல்</u>

யா/நெடு. றோ.க. மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் நான் கடந்த ஒரு வருட காலமாக தங்களது உதவியை பெற்று வருகிறேன். எனது திறமையின் மூலமும் ஊக்குவிப்பு தொகையின் மூலம் நான் பல வெற்றிகளை ஈட்டியுள்ளேன். விளையாட்டு துறையில் வலய மட்டத்தில் 100m, 200m ஓட்டத்தில் முதலிடம் பெற்று மாவட்ட போட்டியில் பங்குபற்றினேன். ஆங்கில தின போட்டியில் "News paper Reading" பிரிவில் மாகாண மட்டத்தில் நான்காவது இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை தேடினேன். வறுமை கோட்டின் கீழ் வாழும் நான் தங்களது உதவியின் மூலம் பல நன்மைகளை அடைந்து வருகிறேன். இவ் பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் தங்களது ஒன்றியத்துக்கு வாழ்த்துக்களையும், நன்றியையும் கூறி நிற்கிறேன்.

நன்றி.

இங்ஙனம் உண்மையுள்ள மாணவி
த. நிஷா.

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

திக : 24 . 10 . 2013

சில்வேஷியா டானியல்
யாழ் / நெடுந்தீவு · றோ.க. மகளிர் கல்லூரி.
நெடுந்தீவு,
24/10/2013

தலைவர்,
நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்,
கனடா.

<u>கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்கியமைக்கான</u>
<u>நன்றி நவில்தல்.</u>

யாழ் / நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவியாகிய சில்வேஷியா ஆகிய நான் தரம் - 06 - ல் இருந்து A/L - வரைக்கும் தங்களால் வழங்கப்படும் பண உதவியினைப் பெற்றுள்ளேன். தற்போது நான் கல்வியற் கல்லூரி செல்லவுள்ளேன்.

நான் பாடசாலையின் மாணவத் தலைவியாக இருந்தது மட்டுமல்லாது, தனி நடனத்தில் வலய மட்டத்தில் 01 - வது இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 02 - வது இடத்தையும், சித்திரம் வரைதலில் தேசிய மட்டத்தில் 02 - வது இடத்தையும், கவிதை எழுதுவதில் மாவட்ட மட்டத்தில் 02 - வது இடத்தையும், கட்டுரையில் 01 - வது இடத்தையும், இளையோர் மரதன் ஓட்டத்தில் அதி திறமைச் சித்தியையும் பெற்றுள்ளேன். மேலும் மேலைத்தேய வாத்திய இசைக் குழுவில் இணைந்திருந்தேன். இவ்வாறான கலைகளில் தேர்ச்சி பெற்றவளாக காணப்பட்டேன். மிகவும் வறுமையான குடும்ப நிலையில் வாழும் எனக்கு வழங்கிய இவ் உதவியானது கல்வியின் உயர் வளர்ச்சிக்கு உறு துணையாய் அமைந்ததுடன், தங்களுக்கு எனது உளம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம் உண்மையுள்ள மாணவி,
டா. சில்வேஷியா.



டே. யுக்தஸ்ஜினி,
8ம் வட்டாரம்,
நெடுந்தீவு.

நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
கனடா

தலைவர் அவர்கட்கு,

ஐயா;

ஊருணைக் கோட்டுடன் சிந் வாலம் பாடசாலை மாணவியாகிய டே. யுக்தஸ்ஜினி. ஆகிய நான் கல்வி கற்பதற்கு தாங்கள் வழங்கிய நிதியுதவிக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள
டே. யுக்தஸ்ஜினி

**J/DELFT R.C. LADIES COLLEGE**

**யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

நெடுந்தீவு DELFT

அன்ரனி சார்ளிஸ் புஷ்ப அன்ரனிற்றா ..........24.10.2013..

யாழ்/ நெடுந்தீவு. றோ.க. மகளிர் கல்லூரி

24.10.2013

தலைவர்

நெடுந்தீவு பாடசாலைகளின்,

பழைய மாணவர் மன்றம்,

கனடா

கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்கியமைக்கு

<u>நன்றி தெரிவித்தல்</u>

யாழ்/ நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் அ. புஷ்ப அன்ரனிற்றா ஆகிய நான் தற்போது க.பொ.த உயர்தர பரீட்சையை எதிர்கொண்டு அதற்காய் காத்திருக்கின்றேன். தரம் 5 இலிருந்து உங்களது உதவியை பெற்று வருகின்றேன். எனது குடும்பம் மிக வறுமையான நிலையில் உள்ளது. நீங்கள் எனக்கு செய்யும் உதவியானது கல்வியின் உயர் வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தது. உங்களது ஒன்றியத்தினால் வழங்கப்படும் உதவியின் மூலம் நான் கல்வி துறையிலும், விளையாட்டு துறையிலும் பல வெற்றிகளை பெற்றுள்ளேன். தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் ஞாபகார்த்த விழாவையொட்டி பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரை போட்டியில் மாவட்டமட்டத்தில் 3வது இடத்தை பெற்றேன். குண்டு, தட்டு, ஈட்டி ஆகிய விளையாட்டுகளில் வலயமட்டத்தில் 1வது 2வது இடங்களை பெற்று மாகாண மட்ட விளையாட்டில் பங்கு பற்றினேன். நான் உயர் நிலைக்கு வருவதற்கு நீங்கள் செய்யும் உதவியானது எனது வாழ்வின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்

உண்மையுள்ள மாணவி

அ. புஷ்ப அன்ரனிற்றா

# J/DELFT R.C. LADIES COLLEGE
## யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி

நெடுந்தீவு DELFT

24.10.2013

வெனிஸ்ராலினி. அலெக்ஸ்சாந்தர்
யாழ். நெடுந்தீவு றோ.க
மகளிர் கல்லூரி
24.10.2013

தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா

### உதவி வழங்கியமையிட்டு நன்றி தெரிவித்தல்

அ. வெனிஸ்ராலினி ஆகிய நான் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தங்களது உதவியினைப் பெற்று வருகிறேன். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நான் தங்களது உதவியின் மூலம் பல நன்மைகளை அடைந்துள்ளேன். க.பொ.த உயர்தர பரீட்சையை எதிர்நோக்கியுள்ள எனக்கு உங்களின் உதவி பெரிதும் ஒத்துழைப்பாய் அமைந்தமையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். நான் விளையாட்டு துறையில் உயரம் பாய்தல் நீளம் பாய்தல், 100m ஓட்டம் ஆகியவற்றில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டத்தில் கலந்து கொண்டதுடன் கலை இலக்கிய போட்டியான தமிழ்நாடு அன்னாயகம் அதிகாரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற கவிதை போட்டியில் மாவட்டத்தில் மூன்றாம் இடம் பெற்று கௌரவிக்கப்பட்டதுடன் கலைவாணி போட்டியில் சிறுகதை பிரிவில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகினேன். இன்றும் பாடசாலை மேலைத்தேய வாத்திய இசைக்குழுவிலும் அங்கத்தவராக உள்ளேன். எனது இந்த முயற்சிகளுக்கு தங்களின் உதவியே ஒத்துழைப்பாய் அமைந்தது. எனவே எனது கல்வி வளர்ச்சிக்கு பக்கபலமாய் இருந்து உதவி வழங்கியமைக்காக மனமார்ந்த நன்றியை தெரிவித்து நிற்கிறேன்.

நன்றி.

இவ்வண்ணம்
உண்மையுள்ள மாணவி
அ. வெனிஸ்ராலினி

# Are you getting Million Dollar advice?



Life100
INSURANCE & INVESTMENTS INC

- Life Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- RESP
- RRSP, Investments
- Group Benefits
- Health & Dental plans
- Disability Insurance

**Receive upto 2 Million if you diagnosed with critical illness or get all your money back if you stay healthy**



MDRT QUALIFIER 2007-2012

**Sritharan Thurairajah** CLU, CHS

Managing Director

MDRT Member of Million Dollar Round Table

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca




உங்கள் விருப்பத்தை நிறைவாக்கும் தரம் நிறைந்த!!!
குணம்ஸ்
Super Market
அனைத்து விதமான பூஜைப் பொருட்கள்,
பசுமை நிறைந்த மரக்கறி வகைகள்,
மீன் இறைச்சி வகைகள்,
சமையல் பாத்திரங்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் மற்றும்
புதிய பழைய திரைப்படங்கள்
நாடகங்கள்
CD & DVD அனைத்தும்
மிகக் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஸ்தாபனம்
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
1145 Morningside Ave #32, 33 Toronto M1BOA7
Tel: 416 283 9998
Open Hours:
Monday to Sunday
8.30am to 11.00pm

தவநாயகம் மரிய துஸ்சந்தி,

நெடுந்தீவு, 10ம் வட்டாரம்,

மத்தி, நெடுந்தீவு.

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்,

கனடா.

செல்வி. தவநாயகம் மரிய துஸ்சந்தி ஆகிய நான் தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி கற்று வருகின்றேன். இந்த வகையில் என்னுடைய கல்வி வளர்ச்சிக்கு நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்(கனடா) எனும் அமைப்பானது பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. நான் மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில் யா/நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வந்த வேளை தரம் ஏழு தொடக்கம் தரம் பதின்மூன்று வரையிலான காலப்பகுதியில் தங்களாலான ஊக்குவிப்பு பணத்தை தந்து என்னுடைய கற்றல் செயற்பாடுகளுக்கு உதவி புரிந்துள்ளார்கள். தற்போது நான் எனது பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கற்றல் உபகரணங்களையும் ஊக்குவிப்புப் பணத்தையும் தருவதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்த வகையில் நான் இவ்வமைப்பை என்றும் மறப்பதற்கில்லை. இதன் பயனாளி என்ற வகையில் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்திற்கு(கனடா) எனது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வமைப்பினது அயராத அர்ப்பணம் நிறைந்த சேவை என்றும் தொடரவும் இவர்களது ஊக்குவிப்பை பெற்று நெடுந்தீவு மண்ணில் பல கல்விமான்கள் உருவாகவும் வாழ்த்துகின்றேன்.

"நன்றி"

இங்ஙனம்,

தங்கள் உண்மையுள்ள,
த. மரிய துஸ்சந்தி
த. மரிய துஸ்சந்தி

தலைவர் / செயலாளர்
நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா
நெடுந்தீவு கிளை,

ம. ஜெகுராஜ்
தரம் :07
யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்
07.11.2013.

நான் நீண்ட காலமாக உங்கள் மன்றம் ஊடாக உதவிப் பணத்தைப் பெற்று வருகிறேன். இதன் மூலம் எனது கல்விக்கான பயிற்சிப் புத்தகங்கள் ஏனைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக அமைந்தது. தற்போது தரம் 7ல் கல்வி பயில்கிறேன். அந்த வகையில் நீங்கள் தரும் இப்பணமானது எனது கல்விக்கு சம்பந்தமான தேவைக்குப் பெரிதும் துணை புரிகிறது. ஆகவே இவ் உதவிக்காக உங்களுக்கு எனது நன்றியை - கூறிக் கொள்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
ம. ஜெகுராஜ்

க. ரேமேகா,
9ம் வட்டாரம்,
நெடுந்தீவு.

நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
கனடா.

தலைவர் அவர்கட்கு

ஐயா!

இறைமைக் கொட்டிலுன் கீழ் வாழும் பாடசாலை மாணவியாகிய க. ரேமேகா ஆகிய நான் உமது கற்பதற்கு தாங்கள் வழங்கிய நிதியுதவிக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
க. ரேமேகா.

தலைவர் / செயலாளர்

ஜெயந்தி பாடசாலையின் பழைய
மாணவர் மன்றம் – கனடா
ஜெயந்தி கிளை

ரா. பவித்திரா
தரம் - 13
பா / ஜெயந்தி மகாவித்தியாலயம்
07 . 11 . 2013

நான் நீண்ட காலமாக தங்கள் மன்றம் ஊடாக உதவிப் பணத்தைப் பெற்று வருகிறேன் இதன் மூலம் எனது கல்விக்கான பயிற்சி புத்தகத்தை தேவைய உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் தரும் பணமானது உதவியாக அமைந்தது தற்போது தரம் - 13 இல் கல்வி பயின்று வருகிறேன் அந்த வகையில் எனது கல்விக்கு சம்பந்தமான தேவைக்கு பெரிதும் துணை புரிந்தது ஆகவே இவ் உதவிக்காக உங்களுக்கு எனது நன்றியை கூறிக் கொள்கிறேன்

நன்றி

இப்படிக்கு
ரா. பவித்திரா

அ.அமல்ராஜ்
6ம் வட்டாரம்
நெடுந்தீவு

நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம்
கனடா

தலைவர் அவர்கட்கு

ஐயா:

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவனாகிய அ.அமல்ராஜ் ஆகிய நான் கல்வி கற்பதற்கு தாங்கள் வழங்கிய நிதியுதவிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள
அ.அமல்ராஜ்

அ.அமல அஜீபா
11 வட்டாரம்,
நெடுந்தீவு.

நெடுந்தீவுப் பாடசாலைகளின்
பழையமாணவர் மன்றம்
கனடா

தலைவர் அவர்கட்கு.

ஐயா,

வறுமைக் கோட்டின் கீழ் வாழும்
பாடசாலை மாணவியாகிய அ.அமல அஜீபா
ஆகிய நான் கல்வி கற்பதற்கு தாங்கள்
வழங்கிய நிதியுதவிக்கு எனது மனமார்ந்த
நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
அ.அமல அஜீபா



# பிருந்தாவனம்

# BITUNTHAVANAM

**$14.00**

100 String Hopper with Sambol and Sothi

*Friday Special* **$6.00**

Veg. Rice & Curry with 6bveg. Curries, Appalam, Rasam & Payasam

*Wednesday Special* BUY 2 GET 1 FREE!

Kottu Rotti, Briyani, Fried Rice, String Hopper Briyani & Noodles

## TAKE-OUT & CATERING

*Weekend Special*

Fish Fried, Chilly Chiken, Sea Food Curries & Thanduri Chicken



### SOUTH INDIAN SPICES

| | |
|---|---|
| 5 Plain Dosa (with Chudney & Sambar) | $3.75 |
| Sadp Dosa (with Chudney & Sambar) | $4.00 |
| Masala Dosa (with Chudney & Sambar) | $5.00 |
| 6 Idly (with Chudney & Sambar) | $4.50 |
| Puttu (2Pcs) | $4.00 |
| Small Veg. Curry | $2.00 |
| Medium Veg. Curry | $5.00 |
| Large Veg. Curry | $7.00 |
| Small Non Veg. Curry | $3.50 |
| Medium Non Veg. Curry | $7.00 |
| Large Non Veg. Curry | $12.00 |

### APPETIZERS

| | |
|---|---|
| Ulundhu Vadai | $0.50 |
| Kadalai Vadai | $0.50 |
| Rolls | $1.00 |
| Patties (For 5) | $2.00 |
| Pakoda | $2.00 |
| Bolly | $2.00 |
| Vaippan | $0.50 |
| Sushiyam | $0.75 |

### KOTTU ROTTI & BRIYANI

| | |
|---|---|
| Veg. Kottu Rotti | $6.00 |
| Mutton Kottu Rotti | $6.50 |
| Chicken Kottu Rotti | $6.50 |
| Beef Kottu Rotti | $6.50 |
| Shrimp Kottu Rotti | $6.50 |
| Veg. Briyani | $6.00 |
| Mutton Briyani (with boiled egg & Salad) | $6.50 |
| Chicken Briyani (with boiled egg & Salad) | $6.50 |
| Beef Briyani (with boiled egg & Salad) | $6.50 |

### BEVERAGES

| | |
|---|---|
| Tea, Coffee | $1.25 |
| Soft Drinks | $1.25 |
| Apple Juice | $1.25 |
| Orange Juice | $1.25 |
| Mango Juice | $2.00 |
| Sarbath | $2.00 |

### RICE & CURRY

| | |
|---|---|
| Veg. Rice & Curry (with 5 Veg. Curries) | $6.00 |
| Mutton Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |
| Chicken Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |
| Beef Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |
| Shrimp Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |
| Fish Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |
| Squid Rice & Curry (With 3 Veg. Curries) | $6.50 |

### FRIED RICE & NOODLES


| | |
|---|---|
| Veg. Fried Rice | $6.00 |
| Chicken Fried Rice | $7.00 |
| Beef Fried Rice | $7.00 |
| Mutton Fried Rice | $7.00 |
| Veg. Noodles | $6.00 |
| Mutton Noodles | $7.00 |
| Chicken Noodles | $7.00 |
| Beef Noodles | $7.00 |

Janpath Plaza, 808 Britannia Road West (Britannia & Mavis),
Mississauga Ontario, L5V OA7


Website: www.bitunthavanam.com Tel: 905 - 567 - 4442



Skyway park
AIRPORT PARKING
60 Skyway Ave,
Etobicoke,
ON M9W 4Y9
P
Airport Parking
Phone : 416 - 674 - 1754
Fax : 416 - 674 - 6949
Toll Free : 1 - 800 - 474 - 3820
Email - skywaypark@sympatica.ca
P
Website : www.skywaypark.ca



HARIKANAN
Printers of the North
PREFECT
MONITOR
MIDDLE
SCHOOL
S.J.C.
GAMES C
PREFECT
PREFECT
#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
0094-21-2222717 /18, 0094-21-7397530
www.harikanan.com
harikanan.print
(H) 0094-21-2222737
0094-21-2222891
print@harikanan.com
Harikanan Printers
Branch: #175A, KARADIPPOKKU JUNCTION, KILINOCHCHI. 0094-21-2280000 printharikanan@gmail.com



# நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா

நெடுந்தீவானது யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மேற்குத் திசையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய 29 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. 1966ஆம் ஆண்டிற்கு முன்னர் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இருந்தே நெடுந்தீவுக்கான படகுச் சேவை நடைபெற்றது. தற்போது புங்குடுதீவு குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கான படகுச் சேவைகள் நடை பெறுகின்றது. இவற்றுக்கிடையிலான தூரம் 7 மைல்களாகும். வடதாரகை II, குமுதினி என்றும் அரசாங்கப் படகுகள் இலவசமாக சேவையில் உள்ளன.

நோயாளர்களுக்கு கியூ மெடிக்கா நிறுவனத்தின் அவசரசேவைப் படகும் சேவை புரிந்து வருகின்றது. இத் தீவானது 18 1/2 சதுரமைல்கள் பரப்பளவையும் கிழக்கு, மேற்காக 5 மைல்கள் நீளத்தையும் வடக்கு தெற்காக 4 மைல்கள் அகலத்தையும் கொண்டதாகும். இத் தீவில் வெடிஅரசன் எனும் தமிழ் மன்னன் மேற்குப் பகுதியில் கோட்டை கொத்தளங்களை அமைத்து தீவுப்பகுதிகளை ஆண்டு வந்தான் என வரலாறு கூறுகின்றது. இக் கோட்டையானது சிதைந்த நிலையில் இன்னும் காணப்படுகிறது.

இங்கு அதிகமாக மந்தைகள் வளர்க்கப்பட்டதாகவும் அதன் காரணமாக இங்கிருந்து
இராமேஸ்வரத்திலுள்ள இராமர் கோவிலுக்கு நித்திய பூசைகளுக்கு பால், தயிர்,
மேற்கு, பெரியதுறை, துறைமுகத்தில் இருந்து நாவாய்கள் கட்டுமரம் மூல
எம் முன்னோர்கள் கூறுவார்கள்.

இத் தீவிற்கு கமலம் - புட
மூலிகைத் தீவு என பல சிறப்புப்
பின்பு டெல்ப்ற் (DELFT) என்ஓ

சிங்கள மக்கள் இத் தீவினை
